# செந்தமிழ்

தொகுதி : 94 | மே 2000 | பகுதி : 5

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் ***மா. தனுக்கோடி பாண்டியன்*** பி.ஏ., பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை—1.

ஆசிரியர் பேரறிஞர் ***நா. பாலுசாமி***

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்.டி.,

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே. எஸ். டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க. சி. அகமுடை நம்பி | உறுப்பினர் |
| திரு. எஸ். பரங்குன்றம் | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர். | நா. பாலுசாமி (ஆசிரியர்) |
| பேரறிஞர். | தமிழண்ணல் |
| பேரறிஞர். | செ. கந்தசாமி |
| டாக்டர். | என். சேதுராமன் |
| பேரறிஞர். | ம. ரா. போ. குருசாமி |
| பேரறிஞர். | சி. கதிர் மகாதேவன் |
| பேரறிஞர். | கு. துரைராசு |
| பேரறிஞர். | அ. அ. மணவாளன் |
| பெரும்புலவர். | இரா. இளங்குமரன் |
| பேரறிஞர். | அ. தட்சிணாமூர்த்தி |
| பேரறிஞர். | எஸ். எம். கமால் |
| பேரறிஞர். | ஈ. கி. இராமசாமி |
| பேராசிரியர். | சே. அரிராமநாதன் |
| பேரறிஞர். | அ. மா. பரிமணம் |

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் *மா. தனுக்கோடி பாண்டியன்* பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

# பொருளடக்கம்


1. உலகம் சுற்றிய தமிழர் "சோமலெ" ... 153

*-பேரறிஞர் நிர்மலா மோகன்*

2. இரகசிய வழியும் மனோன்மணீயமும் ... 162

*- பேரறிஞர் பெ. சுயம்பு*

3. இலக்கணக் குறிப்பின் வீழ்ச்சி ... 172

*- பேரறிஞர் ஏ. ஆதித்தன்*

4. கனடா - அமெரிக்கா நாடுகளில் சில நாட்கள் . 183

*- பேரறிஞர் பா. சூரியநாராயணன்*

5. நூல் மதிப்புரை ... 189

# உலகம் சுற்றிய தமிழர் "சோமலெ"

பேரறிஞர். நிர்மலா மோகன்

"சோமலெ" என்றால் "தெரியலே" என்று தமிழ் நாட்டில் யாரும் சொல்லமாட்டார்கள் என்று மக்களால் பாராட்டப் பெற்ற பெருமைக்குரியவர் சோமலெ எனப்படும் சோம. இலக்குமணச் செட்டியார். தம் வாழ்நாளெல்லாம் தமிழ் வளர்ச்சிக்குப் பல துறைகளிலும் தேனீயைப் போல் அருந்தொண்டாற்றிய பெருமகனார் அவர் இன்றைய பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த நெற்குப்பை என்னும் ஊரில் 1921 ஆம் ஆண்டு பிப்ரவரி பதினொன்றாம் நாள் பிறந்தவர் சோமலெ. அவருடைய தந்தை - சோமசுந்தரம் செட்டியார், தாயார் - நாச்சம்மை. சென்னை மாநிலக் கல்லூரியில் பட்டப் படிப்புப் பயின்றவர். பத்திரிகைத் துறையில் நிறை சான்றிதழ் பெற்றவர். கலை, இலக்கியம், பண்பாடு, சமூகம், இதழியல், சுற்றுலா, வாழ்க்கை வரலாறு, பல்கலைக்கழக வரலாலு, கோயில் வரலாறு, மொழி வளர்ச்சி எனப் பல்துறைகளிலும் நூல்கள் இயற்றித் தமது முத்திரையைப் பதித்தவர் சோமலெ பதின்மூன்று வயது தொடங்கி எழுதப் புகுந்த அவர், தம் வாழ்நாள் இறுதி வரை, தமிழில் அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களும், ஆங்கிலத்தில் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களும் இயற்றித் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிகிறார்.

## உலகம் சுற்றிய தமிழர்:

ஓர் எழுத்தாளர் மேற்கொள்ளும் பயணம், சமுதாயம் முழுவதுக்குமே பயனளிப்பதாக அமைந்து விடுகிறது. சோமலெ உலகம் சுற்றி வந்து படைத்த நூல்கள் எல்லாம் பயண இலக்கியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாய் அமைந்தன. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் திருமூலர் கூற்றுப்படி, தாம் கண்ட வெளிநாட்டுக் காட்சிகளை எல்லாம் மக்களுக்குப்

படம் பிடித்துக் காட்டினார். தாம் கலந்து கொண்ட விழாக்களின் சிறப்புகளை எடுத்துரைத்தார். தாம் கண்டு அனுபவித்த அமெரிக்காவை அமெரிக்காவைப் பார் என மற்றவர்க்கும் காட்டினார். ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம் கழிக்க - களிக்கச் செய்தார் உலக நாடுகளையும், ஆப்பிரிக்க நாடுகளையும் நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்தினார். இமயம் முதல் குமரி வரை வாழும் நம் நாட்டு மக்களையும், நம் நாட்டுப் பெருமைகளையும் எடுத்துரைத்தார். வட மாநிலங்களில் வாழும் தமிழர் நிலையினை ஓர் ஆய்வறிக்கையாகத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்தார். தமிழர் எங்கு இருந்தாலும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும். பிற நாட்டினர்க்கும் தமிழர் பெருமையை உணர்த்த வேண்டும் என்னும் நோக்கத்தில் அந்நூலை எழுதினார் சோமலெ.

*எல்லா நாடும் தன்நாடாய் எங்கும் சுற்றி ஆராய்ந்து*
*நல்லார் பலரின் கருத்தையெல்லாம் நாளும் தேடித் தமிழ்மக்கள்*
*பல்லார் அறியச் செந்தமிழில் பண்பாய் உரைக்கும் என்நண்பன்*

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை சோமலெயைப் பாராட்டியுள்ளார்.

'வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தைச் செய்து பார்' என்பது தமிழ்நாட்டில் ஒரு பழமொழி அந்தச் செயல்களிலே உள்ள தொல்லைகளைக் குறிப்பிடுவதற்காகத்தான் இந்தப் பழமொழிகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றோடு 'உலகத்தைச் சுற்றிப் பார்' என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம் (பிரயாணஇலக்கியம், ப.14) என்று பிரயாணம் செய்வதில் உள்ள சிக்கலை எடுத்துக்காட்டுகிறார் சோமலெ. பிரயாணம் என்பது என்ன? பிரயாண நூல்களை எழுத விரும்புவோருக்கு எத்தகைய தகுதி இருக்க வேண்டும். இந்த நூல்களுடைய சிறப்புகள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் தம் பிரயாண அனுபவக் கட்டுரைகளில் எடுத்துக்காட்டியுள்ளார் சோமலெ. பிரயாண நூல்களும் ஏனைய நூல்களைப் போலவே வாழ்க்கையோடு தொடர்பு உடையனவாக இருக்க வேண்டும். அவற்றில் அலுப்புத் தட்டக்கூடாது. பிரயாண நூல்களைப் படிக்கும் மக்களில் சிலர்

தாங்களும் பிரயாணம் செய்ய வேண்டும் என்ற ஆவல் உள்ளவர்கள். ஆனால் அந்த வாய்ப்பு இல்லாதவர்கள். எனவே ஆசிரியருடைய கண் கொண்டு தாங்கள் வெளிநாடுகளைப் பற்றி அறிய வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த நூல்களைப் படிக்கக்கூடும் என்று கருதியதனால், மக்கள் பயன் பெறத்தக்க வகையில் பயண நூல்களைத் தந்தவர் சோமலெ. "சோமலெயின் பயண நூல்களைப் படித்த பின்னர்தான் எனக்கு அமெரிக்கா போக வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது" என்று அமெரிக்கா சென்று, பல்லாண்டுகள் பணி புரிந்து திரும்பியுள்ள டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி குறிப்பிடுவது ஒன்றே. இவரது பயண நூல் திறனை நமக்கு உணர்த்திவிடும்.

பிரயாணக் கட்டுரைகளும் நூல்களும் மிகக் குறைவாக இருந்த காலத்தில் சோமலெயின் நூல்களும் கட்டுரைகளும் பயண இலக்கியத்திற்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தன. பயணக் கட்டுரைகள் எழுதுவோருக்கும் தம் நூல்கள் வழியாகச் சில செய்திகளையும் எடுத்துரைக்கிறார் சோமலெ. "நாம் எழுதுவது நமக்குப் புரியலாம். ஆனால் வெளிநாட்டைக் காணாத மக்களுக்கும் அதைப் புரியச் செய்ய வேண்டும். ஆகையால் நூல்களை அச்சிடுவதற்கு முன் ஒன்பதாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்புப் படிக்கும் ஒரு மாணவரிடம் கையெழுத்துப் பிரதியைக் கொடுத்து அவனுக்கு அது புரிகிறதா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் தக்க இடங்களில் நம் நாட்டோடு ஒப்புக் காட்ட வேண்டும்" என்று பயண இலக்கியம் படைப்பதற்கு வழி காட்டுகிறார் சோமலெ. 'வணிகனாகச் சென்றேன் எழுத்தனாகத் திரும்பி வந்தேன்' என்று உலகச் சுற்றுப் பயணத்தைப் பற்றிக் குறிப்பிடுவது முற்றிலும் பொருத்தமானதேயாகும்.

நீங்களும் தூதுவர் ஆகலாம் என்று அனைவரையும் படிக்கத் தூண்டும் வகையில் தலைப்பிட்டுத் தூதுவர்களின் தகுதி, அவர்தம் நியமனம், தூதுவரின் கடமைகள், அவருக்கு வழங்கப்படும் சலுகைகள் அவர்கள் வேலை செய்ய வேண்டிய முறைமை, அவர்க்கு நேரிடும் இன்னல்கள் என்று தமிழில் ஒரு புதுத் துறையையே படைத்துக் காட்டிய சோமலெ தம்

சுற்றுப்பயணங்களில் ஒரு நல்லெண்ணத் தூதுவராகவும் விளங்கினார்; பயண இலக்கியத்திற்கே பெருமை சேர்த்தார் சோமலெ.

## மாவட்ட நூல் வரிசை தந்த மாபெரும் தொகுப்பாளர் :

திரு. சோமலெ 1958 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை பாலிடெக்னிக் ஆகிய இரண்டையும் விட்டு வெளியேறி, எழுத்துத் துறையில் முழுமையாக ஈடுபடலானார். தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றியும் ஒரு நூல் எழுத முடிவு செய்தார். இவ்வரிசையில் சேலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, தஞ்சாவூர், வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை ஆகிய பத்து மாவட்டங்கள் பற்றி நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இந்நூல்கள் வெளிவருவதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலப்பல. ஒவ்வோர் மாவட்டத்திற்கும் ஒவ்வோர் இடத்திற்கும் சென்று ஆராய்ந்து தகவல்களைத் திரட்டி, அவற்றைத் தொகுத்துப் பகுத்து எழுதுவார். அவருடைய நூல்களைப் படித்துப் பார்த்தாலே அவருடைய பெரு முயற்சி புலப்படும். நூல்கள் வெளிவந்த பிறகும் கூட, அவ்வூர்களைப் பற்றிய அரிய செய்திகள் பத்திரிகைகளில் வரும்பொழுது, அவற்றைக் கத்திரித்துத் தமக்குரிய பிரதியில் வைத்துக் கொள்வது அவரது வழக்கம். நூலின் அடுத்த பதிப்பின்பொழுது அவற்றைச் சேர்த்து வெளியிடுவது அவரது இயல்பு. தமக்கு உரிய பிரதிகளில் ஒரு பக்கம் மட்டும் அச்சுக் கோர்த்து மறுபக்கம் காலியாக இருக்கும். பிறகு தோன்றக்கூடிய அல்லது கிடைக்கக்கூடிய சில குறிப்புகளை அப்பக்கங்களில் எழுதிச் சேர்த்து வெளியிடுவாராம்.

ஓர் எடுத்துக்காட்டு: நெற்குப்பை என்னும் ஊரின் பெயர்க் காரணம் பற்றி அறிஞர் தமிழண்ணல் பெயரில் ஒரு பத்திரிகையில் வந்த குறிப்பு ஒன்று இராமநாதபுரம் மாவட்ட நூலில் வெட்டி வைக்கப்பட்டுள்ளது. அக்குறிப்பு வருமாறு: எங்கள் ஊர் இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர்

வட்டத்திலுள்ள நெற்குப்பை. குப்பை என்ற சொல் சிலப்பதிகார காலத்திலும் அதற்கு முன்பும் குவியலையே குறித்தது. பயன்படாத குப்பையை அல்ல. பொன்னின் குப்பை, மணியின் குப்பை, அகிலின் குப்பை, சந்தனத்தின் குப்பை என்ற தொடர்களைக் காணலாம். அப்படியானால் எங்கள் ஊர் மிகப் பழமையான ஊர் என்றாகிறது. அதாவது குப்பை என்ற சொல் குவியலைக் குறித்த காலத்திலேயே குவியல் குவியலாக நெல் விளையும் ஊர் நெற்குப்பை என அழைக்கப்பட்டது. ஆனால் இப்போதோ? சோமலெயின் மாவட்ட வரிசை நூல்கள் பத்தும், அவ்வம் மாவட்டங்களைப் பற்றிய கலைக்களஞ்சியமாக விளங்குகின்றன எனில் மிகையன்று.

## வாழ்க்கை வரலாற்று நூல் ஆசிரியர்:

சோமலெ எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் மூன்று. அவை 1. பண்டிதமணி. 2. விவசாய முதலமைச்சர் (ஓமந்தூரார் வாழ்க்கை வரலாறு). 3. சர்தார் வேதரத்தினம்.

பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் தமிழிலும், வடமொழியிலும் மிகுந்த புலமை பெற்றவர்; உழைப்பால் படிப்படியாக முன்னேறியவர்; விடாமுயற்சியும், மன உறுதியும் இருந்தால் உடல் ஊனம் ஒரு தடை அல்ல, வாழ்க்கையில் முன்னேற முடியும் என்று மெய்ப்பித்துக் காட்டியவர். அவருடைய புலமைக்குத் தலை வணங்கி அவருடைய வாழ்க்கை வரலாற்றை நூலாக எழுதினார் சோமலெ. 'எல்லோரும் வள்ளலைப் பற்றி வரலாறு எழுதியபோது இவர் புலவரைப் பற்றி அதுவும் இறந்தவர் பற்றி எழுதுகிறாரே', என்று இவரைக் கேலி செய்தவர்களும் உண்டு.

பண்டிதமணியின் வரலாறு மாணவர்க்குப் பயன் தரும் என்று கருதி, இதை மதுரைப் பல்கலைக்கழகம் பாட நூலாக வைத்தது. இந்நூலைக் கண்ட அரசினரும் மகிபாலன் பட்டியில் பண்டிதமணிக்கு ஓர் உருவச்சிலை எழுப்பி மரியாதை செய்தனர் எனில் சோமலெயின் எழுத்தாற்றலுக்குக் கிடைத்த மணிமகுடம் இது.

**விவசாய முதலமைச்சராக** விளங்கிய ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மகாத்மா காந்தியடிகளின் அடியொற்றி நடந்த தலைவர்களுள் ஒருவர். 'அவர் அஞ்சாநெஞ்சர், ஒழுக்கசீலர், கொள்கைப் பிடிப்பு உள்ளவர், சத்தியம் தவறாதவர், எளிய வாழ்வை மேற்கொண்டவர், ஆற்றல் மிக்கவர். இப்பேர்ப்பட்ட உத்தமர்களைப் பற்றி அடிக்கடி சொல்லி வந்தால்தான், இந்த நாட்டில் மேலும் உத்தமர்கள் தோன்றுவார்கள். அதனால் தான் நம் காலத்தில் வாழ்ந்த இந்தப் பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளிப்படச் செய்ய வேண்டும்' என்னும் எண்ணம் கொண்ட தொழிலதிபர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்களின் தூண்டுதலால், சோமலெ எழுதி வெளிவந்த நூல்தான் விவசாய முதலமைச்சர் என்னும் ஓமந்தூராரின் வாழ்க்கை வரலாற்று நூல்.

"ஓமந்தூராரின் குடும்பத்தினர், உறவினர்கள், நீண்டகால நண்பர்கள், அவருடன் சிறையில் இருந்தவர்கள், அவர் முதலமைச்சராக இருந்தபோது உயர்பதவிகளில் இருந்தவர்கள், முதலமைச்சரின் அலுவலகத்தில் பணி புரிந்தவர்கள், அவர் நியமித்த அமைச்சர்கள், அவருடைய அரசியல் கட்சியினர்,அவருடைய உடல் நலத்தைப் பேணிய மருத்துவர்கள், விமானம் ஓட்டியவர்கள், முடிவெட்டியவர்கள் ஆகியோரைச் சந்தித்து அவர்கள் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் அமைந்த நூலே இது." என்று இந்நூலின் முன்னுரையில் சோமலெ குறிப்பிடுவது, அவர் நூல் எழுதுவதற்குரிய தகவல் திரட்டும் முறையை எடுத்துரைக்கிறது.

சோமலெ எழுதிய மற்றொரு வாழ்க்கை வரலாற்று நூல் சர்தார் வேதரத்தினம் ஆகும். இராஜாஜியுடன் வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் தீவிரப் பங்கு பெற்றவர் அவர். நாடு அறிய வேண்டிய நல்லவர்களைப் பற்றியே சோமலெ எழுதியிருக்கிறார் என்பதை இம்மூன்று நூல்களால் அறியலாம்.

## இலக்கியத் திறனாய்வாளர்:

1950-ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியினர் நடத்திய ஒரு கட்டுரைப் போட்டிக்காக இருபதாம் நூற்றாண்டின்

தமிழ் உரைநடை பற்றி எழுதியிருந்தார். சோமலெயின் கட்டுரை மட்டுமே இப்போட்டிக்கு வந்ததால் மாநிலக் கல்லூரியினர் பரிசு வழங்கவில்லை. இதற்காகச் சற்றும் மனம் தளரவில்லை சோமலெ. மேலும் சில நூல்களைப் படித்தும், பல பேராசிரியர்களோடு விவாதித்தும் 'வளரும் தமிழ்' என்னும் நூலை உருவாக்கிவிட்டார் சோமலெ.

பத்தொன்பதாம் நூற்றாண்டு உரைநடைக்கும், இருபதாம் நூற்றாண்டு உரைநடைக்கும் மிகுந்த வேறுபாடு இருப்பதை ஐந்து திருமண அழைப்பிதழ்களை வைத்தே விளக்கி விடுகிறார் சோமலெ. விவாஹ சுப முகூர்த்தப் பத்திரிக்கை, திருமண அழைப்பு ஆக மாறியதையும், 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனத் தொடங்கும் தேவாரம் போன்ற இலக்கிய மேற்கோளுடன் தொடங்கித் திருமண அழைப்பு அச்சிடப்பட்டதையும், டாக்டர் மு. வரதராசன் போன்ற தமிழ் அறிஞர் தலைமையில் திருமணம் நிகழ்ந்ததையும், நிகழ்ச்சி நிரல் தயாரிப்புடன் திருமண அழைப்பு அச்சிடப்பட்டதையும் எடுத்துக்காட்டி, உரைநடையின் படிப்படியான வளர்ச்சி நிலையினை மிக அழகாகச் சுட்டியுள்ளார் சோமலெ. இடையிடையே அவருக்கே உரிய கேலியும் கிண்டலும் தலைதூக்குகின்றன. ஓர் எடுத்துக்காட்டு' திரு. திருமதி. திருவாட்டி என்ற தமிழ்ச் சொற்களிருக்க, பலர் அழைப்புகளில் சிரஞ்சீவி, சௌபாக்கியவதி என்ற வடசொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அச்சொற்களைக் குறிப்பதற்காகச் சுருக்கமாக சி சௌ, எனத் தமிழிலும் **(CHI, SOW)** என்று ஆங்கிலத்திலும் எழுதி வருகின்றனர்.இவ்வாறு எழுதி வருபவர்கள் **(SOW)** என்று ஆங்கிலத்தில் ஒரு சொல் இருப்பதையும், அச்சொல்லுக்குப் பெண் பன்றி என்று பொருள் இருப்பதையும் அறியார் போலும் இத்தகைய தவறுகளை நீக்கவேனும் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவார்களாக.

உரைநடை வளர்ச்சிக்காகச் செய்திகள் திரட்டும் பணியில் ஈடுபட்டு இருந்தபோது, நாட்டுக்கோட்டை நகரத்தார், தமிழ் மொழியுடனும், அதன் வளர்ச்சியுடனும் கொண்டிருந்த தொடர்பை நன்கு உணர்ந்த சோமலெ பின்னாளில் 'செட்டிநாடும்

தமிழும்' என்னும் நூல் எழுதினார். தமிழையும் சைவத்தையும் தம் இரு கண்களாகப் போற்றி வளர்த்தவர்கள் செட்டிநாட்டு மக்கள். திரைகடல் ஓடித் திரவியம் தேடச் சென்ற அயல்நாடுகளிலும் நகரத்தார் மேற்கொண்ட ஆலயப் பணிகளும். தமிழ்ப் பணிகளும் கணக்கிலடங்காதன. 'சங்க காலந் தொடங்கி இக்காலம் வரை செட்டி நாட்டு மக்கள் மொழி வளர்ச்சிக்கும். சமய வளர்ச்சிக்கும். சமுதாய முன்னேற்றத்திற்கும். தொழில் வளர்ச்சிக்கும் பாடுபட்ட தன்மைகளையெல்லாம் இந்நூலில் விளக்கியுள்ளார் சோமலெ. இந்நூலின் விரிவுதான் செட்டிநாடும் செந்தமிழும். அவருடைய இறுதிப்பணியான இந்நூல். 'செட்டி நாட்டு மக்களேயன்றி எல்லோரும் படித்து இன்புறத்தக்க அரியதொரு இலக்கியச் செல்வமாக விளங்குகின்றது'. என்று பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன் குறிப்பிடுகிறார்.

## நாட்டுப்புறவியல் அறிஞர் சோமலெ:

நாட்டுப்புறவியல் சரியாக வளர்ச்சி பெறாத காலகட்டத்திலேயே 'தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்' என்ற நூலை வெளியிட்டார் சோமலெ. இந்நூலில் தமிழ் மக்களுடைய நம்பிக்கைகள். இதிகாச புராணங்கள். மதம். மந்திரம். பழக்கவழக்கங்கள். மரபுகள். தேர் - திருவிழாக்கள். வாய்மொழி இலக்கியம். பாமர மக்களின் இசை. நடனம். தெருக்கூத்து ஆகிய எல்லாவற்றையும் எட்டு இயல்களாகப் பகுத்து ஆய்ந்துள்ளார் சோமலெ. இந்நூல் **(Folklore of Tamilnadu)** என்னும் பெயரில் ஆங்கிலத்தில் தான் முதலில் வெளியிடப்பட்டது.

## இதழியல் முன்னோடி:

சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1974 - ஆம் ஆண்டு கல்கி அறக்கட்டளைச் சொற்பொழிவுக்காக நிகழ்த்திய சொற்பொழிவுகள்தான் 'தமிழ் இதழ்கள்' என்னும் நூலாக வெளிவந்தன. இதழ்களின் தோற்றம். வளர்ச்சி. இதுவரை வெளிவந்துள்ள இதழ்கள். அவ்விதழ்கள் செய்த தமிழ்ப்பணி. காலத்திற்கும். தேவைக்கும் ஏற்ற அளவில் அவ்இதழ்களின் தமிழ் நடையில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்றவற்றை இந்நூலில்

விரிவாக விளக்கியுள்ளார். இதழியல் துறையில் இன்று எத்தனையோ நூல்கள் வந்து விட்டன. ஆனால் இதழியல் நூல்கள் இல்லாத அந்தக் கால கட்டத்தில் வெளியான சோமலெயின் 'தமிழ் இதழ்கள்' என்னும் நூல் இதழியல் பற்றி அறிந்து கொள்வதற்குச் சிறந்த கையேடாக விளங்குகிறது எனலாம்.

## விழா மலர்கள் உருவாக்குவதில் ஈடு இணை அற்றவர்:

விழா மலர்களை நேர்த்தியாக உருவாக்குவதில் சோமலெவுக்கு ஈடு இணை யாரும் இல்லை. இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட மலர்களை உருவாக்கியுள்ளார் சோமலெ. தன்னிகரின்றி விளங்கும் காசி, இராமேஸ்வரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சிதம்பரம், பழனி ஆகிய திருக்கோயில் மலர்களும், நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்க மலர் போன்றவை, கோயில்களின் வரலாறு, கல்வெட்டு, தொல்பொருள்,இலக்கியங்கள்,சிற்பச் சிறப்பு, கட்டிடக்கலை பற்றிய ஆராய்ச்சி வெளியீடுகளாக அமைந்து சோமலெயின் கைவண்ணத்தைப் பறைசாற்றுகிறது.

அன்பும், பண்பும், அருமையும், எளிமையும், ஆர்வமும், இன்சொல்லும், துடிப்பும், கூர்மதியும் கொண்ட சோமலெயின் தமிழ்ப்பணி தமிழ் உள்ளவரை, தமிழ் மக்கள் உள்ளவரை இவ்வுலகில் நிலைத்து நிற்கும்.

*மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்*

*தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே*

என்பது சோமலெவுக்கு முற்றிலும் பொருந்தும்.

# இரகசியவழியும் மனோன்மணீயமும்

-பேரறிஞர் பெ. சுயம்பு

## முகவுரை:

மனித குலத்தின் வாழ்வோடு தொடர்புடைய வாழ்க்கை நெறி, பண்பாடு, கலையொழுகலாறு, தத்துவம், அறிவியல் போன்ற பல்வேறு கூறுகளால் . இலக்கியங்கள் பின்னப்பெறுகின்றன. இக்கூறுகள் மொழி, நிலப்பரப்பு, இனம் ஆகிய எல்லைகளை மீறி, ஒன்றிடமிருந்து மற்றதற்கு என்ற பரிவருத்தனை இயல்பினால் பரவுகின்றன. இந்தப் பரிவருத்தனையே இலக்கியங்களை உலகப் பொதுவுடைமைகள் என்ற கருத்துக்கு உரிமையாக்கியுள்ளது. உலகப் பொதுவுடைமைகளின் பட்டியலில் இரகசிய வழி **(Secret Way)** மனோன்மணீயம் எனும் இரு படைப்புகளையும் ஒப்பிட்டு ஆராயலாம்.

## இலிற்றனின் இரகசியவழி:

இரகசியவழி இலிற்றன்பிரபு **(Lord Lytton)** என்ற ஆங்கிலக்கவிஞரின் சிறிய கதை இலக்கியம். 'மிலிற்றசின் மறைந்த கதைகள்' **(Lost Tales of Miletus)** என்ற இக்கவிஞரின் தொகுப்பில் இக்கவிதைக்கதை இடம்பெற்றுள்ளது. அளவான-தேவைக்கேற்ற கதைமாந்தர் படைப்பு, மயக்கமற்ற-தெளிவான-ஒருவழிப் பாதையில் நேராகச் செல்கிற கதை நிகழ்வு, மனத்தைக் கொள்ளை கொள்கிற முருகியல் வருணனைகள், நிறைந்த செறிவான சொல்லாட்சி எனும் பண்புகள் இலிற்றனைச் சிறந்த-திறம் வாய்ந்த கவிஞர் வரிசையில் சேர்த்துள்ளன. நிகழ்ச்சிகளை நிரலாகத் தொகுத்து, சுருங்கச் சொல்லி 780 அடிகளில் இலிற்றன் விளக்கிச் சொல்கிறார்.

தானைஸ் **(Tanais)** ஆற்றின் வடபாலுள்ள சித்திய நாட்டுக்கும் அண்டையிலுள்ள பாரசீக நாட்டுக்கும் இடையே உள்ள எல்லைத் தாவாவைப் பயன்படுத்தி, சித்திய நாட்டு மன்னனை வஞ்சகமாகப் போரில் வீழ்த்தி விட்டு, எதிரியின்

துணையுடன் ஆட்சியுரிமையைக் கைப்பற்ற வஞ்சகத் திட்டம் ஒன்றினைச் சித்தியத் தலைமைத் தளபதி உருவாக்குகிறான் இந்தத் துரோகத்திட்டம் சித்திய அரச குலகுருவாலும் பாரசீக மன்னனாலும் முறியடிக்கப்படுகிறது. குலகுரு விரும்பியவாறே சித்திய அரசுரிமை வாரிசாகிய இளவரசி பாரசீக இளவரசனுக்கு மணம் செய்யப்படுகிறாள். பாரசீக இளவரசனும் தான் நெடுநாட்களாகக் கனவில் கண்டு காதலுற்ற பெண்ணே தனது வாழ்க்கைத் துணையாக வாய்த்தமைக்குப் பேருவகை கொள்கிறான்.

இக்கதையில் தளபதியின் சதித்திட்டத்தை ஏற்கெனவே அறிந்த குலகுரு தெலிசியசு **(Teleutius)** தம் மன்னன் ஓமர்தசையும் **(Omartes)** அவனது ஒரே மகள் அர்கியோப்பையும் **(Argiope)** ஆபத்துக் காலத்தில் காப்பாற்றும் பொருட்டு அமைத்த சுருங்கைவழி **(Secret Way)** முதன்மை பெறுகிறது அரச வாழ்வில் 'அடுத்திருந்து கெடுப்பவர்களோடு' உறவாடுவது தவிர்க்கவியலாதது. எனவே அரண்மனையில் இரகசிய வழியை அமைப்பதும் இன்றியமையாதது அடுத்திருந்து கெடுக்கிற தளபதி சியுதஸ் **(Seuthes)** வகுத்த திட்டத்தினால் முற்றுப்புள்ளி பெறவிருந்த ஓர் அரசபரம்பரை காப்பாற்றப் பெற்றதற்கு இரகசிய வழியே காரணம் என்று கவிஞர் கருதியதால், தம் படைப்புக்கு இரகசிய வழி என்ற பெயரைச் சூட்டியிருக்கிறார்.

இரகசிய வழியின் கதை ஆசியப் பழங்குடி மக்களிடம் புகழ்பெற்ற புராணக் கதையிலிருந்து தத்தெடுக்கப்பட்டதாகும் இக்கதை நிகழ்ச்சிகளை அம்மக்கள் தங்கள் கோவில்கள், அரண்மனைகள், இல்லங்களில் ஓவியங்களாகத் தீட்டிப் பேணினர். இதனை ஆதேனசு **(Athenaeus)** என்ற நூலின் பதின்மூன்றாம் இயலில் காணலாம் என்று கவிஞர் இலிற்றன் நாகரிகத்தோடும், பெருந்தன்மையோடும் வெளிப்படையாகக் கூறுகிறார் தவிர, கதைப்பின்னலின் மெருகுக்கு ஏற்ப மூலக்கதையில் சிறிது மாற்றம் செய்துள்ளதாகவும் கதை மாந்தர்களின் பெயர்களில் ஒலிப்பு எளிமைக்கு ஏற்ப மாற்றம் செய்துள்ளதாகவும் சுட்டுகிறார். இளவரசி ஓடதிசு, **(Odatis)**

இளவரசன் சரியட்ரசு **(Zariadres)** எனும் சித்திய மொழிப்பெயர்கள் முறையே அர்கியோப் **(Argiope)** என்றும் சரியதசு **(Zariates)** என்றும் ஆக்கம் பெற்றுள்ளன.

இக்கதை படைப்பாளி கூற்றாக அமைந்துள்ளது ஆயினும் ஆங்காங்கே பரவலாகக் கதைமாந்தர்களின் உரையாடலும் இடம்பெற்று, நாடகச்சாயலையும் பெற்றுள்ளது.

**சுந்தரம்பிள்ளையின் நோக்கம்:**

மனோன்மணீயம் தத்துவப் பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளையால் கவிதையாக எழுதப்பெற்றது. தமிழ்மொழியில் புதிய வளம் சேர்த்தல் எனும் கடமை காரணமாக இந்நூலை இயற்றியதாக ஆசிரியர் தமிழில் எழுதியுள்ள முகவுரையில் குறிப்பிடுகிறார். மேலும், "தமிழில் வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உள்ளது போன்ற அமைப்புடைய நாடகநூல் கிடைக்கவில்லை'' என்றும் அக்குறையை நீக்குமாறு, "சிலகாலம் முயன்று வடமொழி முதலிய பாஷைகளில் நாடகரீதியைப் பின்தொடர்ந்து இயற்றிய "மனோன்மணீயம்" என்னும் இந்நாடகம்" என்றும் கூறுகிறார். இவர் இந்நூற்கு எழுதிய ஆங்கில முகவுரை பின்வருமாறு தெரிவிக்கிறது. **"Among the rich and varied forms of poetic composition extant in the Tamil Language, the Dramatic type so conspicuous in Sanscrit and English, does not seen to find a place".**

மனோன்மணீயத்தின் கதை இரகசியவழியைத் தழுவிப் பின்னப்பட்டுள்ளது என்பதை ஆசிரியர் வெளிப்படையாகக் கூறுகிறார். **"The plot of the play is based on one of Lord Lytton's Lost Tales of Miletus called Secret Way, and for the sake of easy understanding, the outline of that Scythian story as enlarged and adapted in this Dravidian play may be thus presented".**

**கதை மாந்தர்:**

முதன்மைக் கதையைப் பொறுத்தவரை இரண்டிலும் ஒப்புமை காணப்படுகிறது. கதை மாந்தர்களின் பெயர்களைப்

பேராசிரியர் பிள்ளை தம் விருப்பிற்கேற்பக் கருத்தாழத்துடன் அமைத்துள்ளார். சித்திய மன்னன் ஓமர்தசின் இடத்தை ஜீவகன் பெறுகிறான். குலகுரு தெலிசியசு ஜீவகனின் குரு சுந்தரமுனிவர் ஆகிறார். இளவரசி அர்கியோப் தமிழ் நாடகத்தில் மனோன்மணி என்ற பெயரைப் பெறுகிறாள். பாரசீக நாட்டு இளவரசன் சரியதசே சேரமன்னர் புருஷோத்தமன். சித்திய மன்னனின் வஞ்சகத்தளபதி சியுதசின் இடத்தில் ஜீவகனின் தலைமை அமைச்சன் குடிலன் வருகிறான்.

**கனவு தந்த காதல்:**

கதையாக்க உத்திகளுள் கனவு இரு நூல்களிலும் முதன்மை பெறுகிறது. நிலவுரிமை காரணமாக இரு நாடுகளுக்கிடையில் உள்ள நீண்டநாள் பகைமையைத் தீர்க்கிற வழியாக, வலிமை குறைந்த மன்னனின் மகளை வலிமை மிகுந்த மன்னர் மணந்து கொள்ளுதலை நூலாசிரியர்கள் இருவரும் உணர்த்துகின்றனர். மணமகள் எதிரியின் மகள் என்றால் மனமுறிவு ஏற்படுதல் கூடும்; அவள் மனத்திரையில் நிழலாடிக் காதலை வளர்த்தவளாயின், அவளை எய்தியே தீருவது என்ற முனைப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக ஏனைய விருப்புவெறுப்புகளில் துறவு மனப்பான்மை உருவாகி, நட்பு தோன்றும் என்பதை உணர்த்துகிற நோக்கில் இரு ஆசிரியர்களும் காதலை வளர்க்கிற உத்தியாகக் கனவைப் படைத்துள்ளனர்.

சித்திய இளவர்சி அர்கியோப் பாரசீக இளவரசன் சரியதசின் கனவில் நெடுநாட்களாக வந்து நிழலாடுகிறாள். அவள் யார்? எந்நாட்டவள்? என்பதை அறியாத சரியதசு அவளது பேரழகால் கவரப்பெற்றுக் காதல் வயப்படுகிறான். தனது கனவு குறித்துக் குலகுருவிடம் கூறுகிறான். “இனிமையும் எழிலும் வாய்ந்த முகத்தை உடைய பெண்ணுருவம் ஒன்று நாள்தோறும் இரவில் கனவில் வருகிறது. அவளின்றேல் எனக்கு வாழ்வு இல்லை” என்று புலம்புகிறான்.

**Sacred the trust, the King thus told his trouble**
**How that each night (thro' three revolving moons)**

**An image comes before me in a dream ;**
**Ever the same sweet face,**

**Lovely as that which blest the Carian slumber**
**Nought mid the dark-eyed daughters of the East,**

**Nought I have ever seen in waking hours,**
**Rivals in charm this shape.**

**Which hath no life - unless a dream**
**Hath substance (268-276).**

ஓமர்தசு தனது மகளின் மணம் குறித்துத் தூது அனுப்பியபோது, அவளை ஏற்க மறுத்து, எல்லைத் தாவாவைக் கிளப்புகிறான் பாரசீக மன்னன். ஓமர்தசு போரில் தோற்ற நிலையில் வஞ்சகமாக எதிரி சரியதசிடம் சரணடைந்து, அவனது ஆதிக்கத்தின் கீழ்ச் சித்தியச் சிற்றரசனாக ஆளுகிற தகுதிக்காகத் தளபதி சியுதசு மண்டியிடுகிறான். அவனது துரோகச் செயலை ஏற்காத சரியதசு, துரோகி ஒருவனை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தமாட்டேன் என்று கூறி, அவனைச் சிறைப்பிடித்துச் சுருங்கை வழியாகச் சித்திய அரண்மனைக்குள் நுழைகிறான். அங்கு மணமகனைத் தெரிவு செய்வதற்காக மணக்கோலத்தில் நிறுத்தப்பட்டிருக்கிற அர்கியோப்பைக் காண்கிறான். கனவில் வந்த காதலி தன்னை நோக்கி ஒயின் கிண்ணத்துடன் நெருங்கியதும், அவளை அரவணைத்துக் கொள்கிறான்.

கனவே! உன்னை எவ்வாறு இழந்திருந்தேனோ!

**O dream atlast! atlast! how i have missed thee! (748)**

சரியதசு வியப்பால் ஆரவாரிக்கிறான். தெய்வங்கள் இரக்கமுள்ளவை **(The Gods are merciful).** அர்கியோப் மகிழ்ச்சியால் பூரிக்கிறாள். இருவரும் முத்தமழை பொழிகின்றனர்.

சரியதசு 'தங்கள் மகளைக் கொடுத்து, இந்த மகனை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று ஓமர்தசிடம் வேண்டுகிறான்.

'பகைவனது மகள்' என்று மறுத்து ஒதுக்கப்பட்ட பெண்ணே கனவில் வந்தமையால், பகைமையை முறித்து

உறவை அமைத்துக் கொள்கிறாள். இவ்வாறு இரகசியவழியில் கனவு இன்ப முடிவுக்கான காரணியாகி முதன்மை பெறுகிறது.

கனவின் இன்றியமையாமை மனோன்மணியத்திலும் இன்ப முடிவுக்குக் காரணமாகவே அமைகிறது. மனோன்மணியைப் புருஷோத்தமன் கனவில் காண்கிறான்.

யார்கொலோ அறியேம் யார்கொலோ அறியேம்
வார்குழல் துகிலொடு சோர மாசிலா
மதிமுகங் கவிழ்த்து நுதிவேற் கண்கள்
விரக தாபத்தால் தரளநீர் இறைப்ப
. . . . . . . . . . . . . . . . . . . . . . .
பித்துறச் செய்த இப்பேதை யார்கொலோ
எவ்வுலகினளோ அறியேம்... (2:3.1 - 20)

## தமிழ்க்காதல்:

குடிலன் திருநெல்வேலியில் கட்டிய அரண்மனை எழிலைக் கண்டு உறங்கிய மனோன்மணியின் கனவில் புருஷோத்தமன் வருகிறான். அவன்பால் காதல் கொள்கிறாள். காதற் காய்ச்சலால் துவள்கிறாள். ஆயினும் புருஷோத்தமன் காதலி எழிலை நினைந்து புலம்பியதைப் போன்ற வருணனை முயற்சியை ஆசிரியர் பிள்ளை மனோன்மணியிடம் மேற்கொள்ளவில்லை. தமிழ்க்காதல் மரபில் பெண்டிர் மனக்கட்டு அவிழ்ந்து புலம்புதல் விரும்பத்தக்கதன்று. இந்தத் தமிழ்ப் பண்பாட்டின் - காதலின் மரபு இங்குப் பேணப்படுகிறது.

இரகசிய வழியில் சரியதசு மட்டுமே கனவு வாயிலாக அர்கியோப்பைக் காதலிக்கிறான். கதை முடிவில் திருமணத்தின் போது அர்கியோப் பேருவகை கொள்கிறாள் என்று வருணிப்பதன் வாயிலாக, அவள் சரியதசை விரும்புதல் உணர்த்தப்படுகிறது. ஆயினும் வெளிப்படையாக இலிற்றன்பிரபு அதனைக் கூறவில்லை. ஆனால் அன்பின் ஐந்திணை இருபுறக் காதலாகிய தமிழ் மரபைப் பேணுமாற்றான் புருஷோத்தமனும் மனோன்மணியும் ஒருவரை மற்றவர் கனவில் கண்டு மனமாரக் காதலிக்கின்றனர். இங்கு விதிகாரணமாக அமைகிற தெய்வப் புத்துணர்ச்சி காதலுக்கு அடித்தளமாக்கப்பட்டிருக்கிறது.

**எழில்மிகு அரண்மனை:**

இரு நூல்களிலும் புதிய அரண்மனை கட்டப்பெற்று, அதன் எழில் விரிவாக வருணிக்கப்பட்டிருக்கிறது. அரண்மனையில் அரசகுடும்பத்தின் பாதுகாப்பிற்காகச் சுருங்கை வழி (இரகசிய வழி) அமைத்தல் கட்டட உருவாக்கத்தில் இன்றியமையாமை பெறுகிறது

**கதை மாந்தர் திறன்:**

கதை மாந்தர்களைச் சுற்றியே நிகழ்ச்சிகள் அமைகின்றன. எனவே கதைப் பின்னலுக்குக் கதை மாந்தர்கள் மிக இன்றியமையாமையாகின்றனர். இவர்கள் கதையோட்டத்துடன் கோர்த்துச் செல்வராயின் கதை தொய்வின்றி, படிப்பவரின் மனத்தில் தோய்வை ஏற்படுத்தும். கதையோட்டத்தைத் தாண்டி ஒருகையில் ஆறுவிரல், ஏழுவிரல் இருத்தலைப் போன்று கதைமாந்தரின் நிகழ்ச்சி அமையின் அம்மாந்தரும் நிகழ்ச்சியும் மிகையாகி, படிப்பவருக்குச் சலிப்பை உண்டாக்கக் கூடும்.

இரகசிய வழியில் கவிஞர் இலிற்றன் தேவைக்கேற்ப மாந்தரைப் படைத்து, கதை நிகழ்ச்சியைத் தொடராக்கி வளர்க்கிறார். இப்படைப்பு கவிதை நடையில் இருப்பினும் ஒரு சிறுகதை என்ற உணர்வினைத் தோற்றுவிக்கிறது. கதையோட்டத்தில் எதிர்த்தலைவன் **(Villain)** சியுதசின் வஞ்சனைத் திட்டம் உச்சம் பெற்றுக் கதைத்தலைவன் சரியதசின் நற்பண்பினால் முறிக்கப்பெற்று வீழ்கிறது.

சித்திய மன்னன் ஓமர்தசு கள்ளம் கபடமற்றவன். குலகுரு தெலிசியசின் அறிவுரையை ஏற்று, மகள் அர்கியோப்பைப் பாரசீக இளவரசன் சரியதசுக்கு மணம் செய்விப்பதன் வாயிலாகப் பகையை முடித்திட அவாவுகிறான். இது நிறைவேறினால் கதை நிகழ்ச்சியும் இதனுடன் முற்றுப் பெற்றுவிடும். மாறாக, எதிர்த்தலைவன் சியுதசின் வஞ்சனைத் திட்டத்தினால் கதை வளர்கிறது. பாரசீக மன்னனை மணந்தால் சித்திய நாடு அந்நியனுக்கு அடிமையாகிவிடும். இதனை மக்கள் எதிர்ப்பர் இராணுவக் கலகம் மூளும் என்று கூறி, ஓமர்தசைத் தளபதி தடுக்கிறான்.

**This marriage with the Mede**
**Would leave to heirs remote the Scythian Kingdom**

**Sow in man's minds vague fears of foreign rule,**
**Which might, if cultured, spring to armed revolt**

**In armed revolt how off**
**Kings disappear, and more dare call it murder.**
***(143-148)***

போர் மூளுகிறது. ஓமர்தசு தோற்கிறான் தனது மேலாண்மையை ஏற்றுக் கொண்டதன் அறிகுறியாக ஒரு குவளை சித்திய நாட்டுச் சுனை நீரையும் ஆறு கிரெய்ன் **(grain)** மணலையும் திறையாகத் தருமாறு சரியதசு கேட்கிறான். தன்மானம் ஓமர்தசைத் தடுக்கிறது. மீண்டும் போர். தளபதி சுருங்கை வழியாகச் சரியதசைக் கண்டு பேரம் பேசுகிறான். அதற்கு அவன். 'ஒரு துரோகியை அரியணை மீது அமர்த்தமாட்டேன்' என்று கூறுகிறான்.

**But I will place no tratior on a throne**
**Yet since thy treason sowes me many lives**
**I for their sake spare thine (641-643)**

சரியதசு தளபதியைச் சிறைப்பிடித்து ஓமர்தசிடம் அழைத்து வருகிறான் இவ்வாறு கதை வளர்ச்சியில் எதிர்த்தலைவன் முதன்மை பெறுகிறான்.

மனோன்மணீயம் இந்திய மரபை ஒட்டிய இலக்கிய விவரிப்புக் கொள்கைகளையும் கதை அமைப்பினையும் கொண்டு பின்னப்பட்டுள்ளது. இதனை முகவுரையில் ஆசிரியரே கூறுகிறார் எனவே இதில் பழைய புராண, பெருங்காப்பியங்களின் சாயலை ஆசிரியர் படரவிட்டுள்ளார். இதன் காரணமாகச் சில கிளைக்கதைகளும் மிகையாகப் பல கதைமாந்தர்களும் படைக்கவேண்டிய கட்டாயம் ஆசிரியருக்கு ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்டாயமே மனோன்மணியத்தைச் சிறந்த நாடகம் என்ற தகுதியிலிருந்து. கதை இலக்கியம் என்ற தகுதிக்கு இழுத்துச் சென்றுள்ளது.

மனோன்மணீயத்தின் முதன்மைக் கதை இரகசிய வழியின் கதையினையே பெரிதும் ஒத்துள்ளது. எனவே முதன்மைக் கதைமாந்தர்களைச் சுற்றி அமைகிற நிகழ்ச்சிகளும் அத்தன்மையினவே. இக்கதையிலும் வஞ்சக அமைச்சன்

குடிலனின் திட்டங்களே கதையை வளர்க்கின்றன. மனோன்மணீயைச் சேரமன்னன் புருஷோத்தமன் மணம் செய்தால் பாண்டிய அரசுரிமையைக் கைப்பற்றும் தன் எண்ணம் நிறைவேறாது என்று குடிலன் கருதுகிறான். புருஷோத்தமனிடம் திருமணம் பேசுகிற தூதனாகத் தன்மகன் பலதேவனைத் தெரிவு செய்து, ஜீவகன் கருத்துக்கு மாறாக நிலத்தாவா என்ற கதையைத் தாமே புனைந்து புருஷோத்தமனிடம் கூறி, போரை மூட்டுகிறான். ஜீவகன் தோற்கிறான்

புருஷோத்தமன் ஒரு குவளைத் தாமிரபரணி நீரையும் வேப்பமாலையினையும் ஜீவகனிடம் திறைப்பொருளாகக் கேட்கிறான். தன்மானம் ஜீவகனைத் தடுக்கிறது. மீண்டும் போர் மூளுகிறது. சாகும் முன்னர் மனோன்மணீயின் திருமணத்தைப் பலதேவனுடன் நடத்துகிற நிகழ்ச்சி நடைபெறுகிறது. சுருங்கை வழியாக வெளியே சென்ற குடிலன் புருஷோத்தமனின் பாசறையை அடைய நேரிடுகிறது. அவன் புருஷோத்தமனிடம் சரணடைந்து, தன்னை ஒரு சிற்றரசனாக ஆக்குமாறு பேரம் பேசுகிறான். புருஷோத்தமன் குடிலனைச் சிறைப்பிடித்து ஜீவகனிடம் அழைத்து வருகிறான். கனவில் கண்ட காதலர் இருவரும் நனவு வாழ்வில் இணைகின்றனர்.

மனோன்மணீயத்தில் வருகிற வாணி, நடராஜன், நாராயணன், பலதேவன் போன்ற கதைமாந்தர்களைச் சுற்றிக் கிளைக் கதைகளை ஆசிரியர் படரவிட்டுள்ளார். வாணி-நடராஜன் காதல், ஜீவகனின் தோழன் நாராயணனைக் கழுவேற்றுகிற முயற்சி, பலதேவனின் கள்ளக் காதல் ஆகியன அக்கதைகள் ஆகும் இவை மனோன்மணீயத்தை மேடை நாடகம் என்ற தகுதியிலிருந்து திருப்பிச் சிலப்பதிகாரம் முதலிய கதை இலக்கியத் தகுதிக்கு இழுத்துச் செல்கின்றன.

**சைவசித்தாந்த விளக்கம்:**

மனோன்மணீயத்தின் கிளைக்கதைகளுள் சிவகாமிசரிதம் குறிப்பிடத்தக்கது. பரந்தாமன் பார்த்தனுக்குக் கூறிய கீதையைப் போன்றது இது. தோழி வாணி உரையாடலின்போது மனோன்மணிக்கு இக்கதையைக் கூறுகிறாள் - இது சைவ சித்தாந்தத்தின் குறியீடாகக் கருதப்பெறுகிறது. இதிகாசங்களிலும், புராணங்களிலும் தத்துவம் கூறுகிற கீதை இருப்பதைப் போன்று சிவகாமி சரிதம் மனோன்மணீயத்தில் உள்ளது. தமது படைப்பு இறவாத் தெய்வீகப் புகழைப் பெறுதல் வேண்டும் என்ற

அவாவின் காரணமாக இத்தகைய அமைப்பினைச் சுந்தரம்பிள்ளை உருவாக்கியிருக்கிறார்.

மனோன்மணீயம் முழுவதும் சைவ சித்தாந்தத்தின் விளக்க நூலாக ஆசிரியரால் கருதப்படுகிறது. இதனை அவரே முகவுரையில் சுட்டுகிறார். கதைமாந்தர்கள் யாவரும் சித்தாந்தக் குறியீடுகளாகப் படைக்கப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையிலேயே கவிஞர் இலிற்றன் இரகசியவழி என்று பெயரிட்ட கதைக்குச் சுந்தரம்பிள்ளை மனோன்மணீயம் என்று தத்துவம் சான்ற பெயரைச் சூட்டியுள்ளார். "உருவக மாலையாகக் கொள்ளுங்கால், ஜீவகனைச் சார்போதமான ஜீவாத்மா ஆகவும், அஃவனைத் தம் வசப்படுத்தி யாட்டுவித்த குடிலனை மாயாசக்தியாகவும், மனோன்மணியை ஜீவாத்மாவின் பரிபக்குவ காலத்துதிக்கும் முத்திக்குரிய உத்தம பாகமான சுத்த தத்துவமாகவும்.... புருடோத்தமனை அனுக்கிரஹ சக்தியாகவும்... மதுரையை ஜீவாத்மா உதித்தொடுங்கும் மூலஸ்தானமாகவும் .... திருநெல்வேலிக் கோட்டையை மாயாகாரியமான அன்னமயாதி பஞ்சகோசத்தாலமைந்த சரீரமாகவும் .... பாவித்து உய்த்துணர்ந்து கொள்க". இது சுந்தரம்பிள்ளை தருகிற விளக்கம். ஜீவகன், சுந்தரம், மனோன்மணி, புருஷோத்தமன் என்ற பெயர்த்தேர்வும் இந்தத் தத்துவ உள்நோக்கம் கொண்டதே.

மனோன்மணீயம் படித்தற்காக இலக்கிய நடையில் எழுதப்பட்டதே அன்றி, மேடையில் நடித்தற்காகப் பேச்சுநடையில் எழுதப் பெறவில்லை என்று சுந்தரம்பிள்ளையும் சுட்டுகிறார். **"The play here submitted, it is needless to say, is meant for the study room and not the stage and it is therefore written in the literacy and not altogether the colloquial dialect."**

## தொகுப்புரை:

இரகசிய வழி, மனோன்மணீயம் இரண்டும் முந்தைய நூல்களைத் தழுவி இயற்றப்பெற்றவை. இரகசிய வழியில் கதை கூறுகிற நெறி ஆற்றொழுக்காக அமைந்துள்ளது. மனோன்மணீயம் ஆங்கில, வடமொழி மரபுகளை ஏற்று, இந்தியச் சமய விளக்கமாக எழுதப்பெற்றுள்ளது. கதைமாந்தரின் உரையாடல் நடையும் அங்கம், களம் என்ற பிரிவு வகைகளும் வடமொழி, ஆங்கில நாடக அமைப்பிலிருந்து ஏற்கப்பெற்றுள்ளன. ■

# இலக்கணக் குறிப்பின் வீழ்ச்சி

பேரறிஞர். ஏ. ஆதித்தன்

இலக்கணக்குறிப்பு கற்பித்தலின் நோக்கமும், அதனால் ஏற்படும் பயன்களும், இதனைக் கற்பிக்கும் முறைகளும், மாணவர்கள் மத்தியில் இலக்கணக்குறிப்பின் வீழ்ச்சியும் இக்கட்டுரையில் விவரிக்கப்படுகின்றன.

மாணவர்கள் மொழியின்கண் காணப்பெறும் சொல்வகையினைப் புரிந்துகொள்ளும் வகையிலே இலக்கணக்குறிப்பு அறிமுகம் செய்யப்படுகின்றது. இதனால் மாணவர்கள் மொழியமைப்பினை முறையாகத் தெரிந்து மொழியினைச் சிறப்பாகக் கையாள முடிகிறது.

இக்காலத்தில் பெரும்பான்மையான மாணவர்கள் இதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் மனப்பாடம் செய்து இலக்கணக்குறிப்பினை எழுதுவதனைக் காணமுடிகின்றது. மேலும் சிலர் குறுக்குவழியில் இதனைப் புரிந்துகொண்டு தேர்வு எழுதுவதனையும் காணமுடிகின்றது. சில மாணவர்கள் தேர்வில் முழுமையாக இலக்கணக்குறிப்புப் பகுதியினை விட்டுவிடுகின்றனர்.

மாணவர்களுக்கு இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வி தேவையில்லை எனக் கருதுகின்ற அறிஞர்களும் உண்டு. இன்னமும் மொழியாசிரியர்களாக வரவிருக்கும் மாணவர்களுக்கு மட்டுமே இத்தகைய இலக்கணக்கல்வி புகட்டினால் போதுமெனக் கூறும் அறிஞர்களும் உண்டு.

மொழியின் வழக்காறுகளையும், சொற்களின் பொருள் நுட்பங்களையும் புரிந்து மாணவர்கள் இலக்கியப்பயிற்சி பெறுவதற்கும், மொழிவரலாறு தெரிந்து கொள்வதற்கும் இலக்கணக்குறிப்பு மிகவும் துணைசெய்கின்றது. இவ்வகை இலக்கணப்பயிற்சி பயன்வகை இலக்கணத்தின் பாற்படும்.

இலக்கணக்குறிப்பினை அறிமுகம் செய்யும் நிலையில் கலைச்சொற்களிலும் அவற்றின் செய்தியிலும் தெளிவு

ஏற்படாமையினால் மாணவர்கள் இதனைப் புறக்கணிப்பதாகத் தெரியவந்துள்ளது.

தமிழ்மொழி வரலாற்றில் பல சொற்கள் வழக்கிழந்து விட்டன. மேலும் பல சொற்கள் அருகிய வழக்குச்சொற்களாக அமைந்துவிட்டன. இவற்றின் வடிவம், அமைப்பு, பொருள், வழக்காறு ஆகியன சிக்கல் நிறைந்து காணப்பெறுவதால் இவற்றில் பயிற்சி அளிப்பதே நமது பாடத்திட்டத்தில் காணப்பெறும் இலக்கணக்குறிப்பின் நோக்கமாகும். இப்பயிற்சியினால் மாணவர்கள் பழைய இலக்கியத்தில் ஈடுபடவும், மொழிவரலாற்றினைத் தெரிந்து கொள்ளவும் முடிகின்றது.

மாணவர்கள் இலக்கணக்குறிப்புப் பகுதியில் ஆர்வம் காட்டாமைக்குப் பல காரணங்களைக் குறிப்பிடமுடியும். மாணவர்களுக்குக் கற்பிக்கப்பெறும் இலக்கணக் கலைச்சொற்கள் அனைத்தும் வழக்கிறந்தவைகளாகவோ அன்றி அருகிய வழக்கினவாகவோ அமைந்துள்ளன. மாணவர்களின் பயன்பாட்டு மொழியில் இத்தகைய சொற்கள் காணப்பெறாமையால் இவற்றை மாணவர்களால் எளிதில் புரிந்துகொள்ள இயலாமல் போகின்றது.

அளபெடை, உரிச்சொல், செய்யா வாய்பாட்டு வினையெச்சம், முற்றெச்சம், செய்பு வாய்ப்பாட்டு வினையெச்சம், வழுவமைதி போன்றவற்றை எந்தநிலையிலும் இக்கால மாணவர்களால் புரிந்துகொள்ள இயலாமல் போகின்றது. ஏனெனில் அன்றாட வாழ்வில் இவர்கள் பயன்படுத்தும் மொழியில் இத்தகைய வழக்காறுகள் காணப்பெறுவதில்லை.

முதலில் மாணவர்களுக்குச் சொல்வகை பற்றித் தெளிவாகக் கல்விபுகட்டி அதற்குரிய சான்றுகள் அனைத்தையும் அவர்கள் பயன்படுத்தும் மொழியிலிருந்து கொடுத்து அவற்றை விளங்க வைக்கவேண்டும். அதன் பின்னரே வழக்கிறந்த அருகிய வழக்குடைய சொற்களின் இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வி புகட்டப்பெறல் வேண்டும்.

இக்கால மொழியமைப்பினைப் புரிந்து கொள்வதற்கும் இலக்கணக்குறிப்பு பயன்படுவதால் இக்கல்வி அனைத்து மாணவர்களுக்குப் புகட்டப்பெறல் வேண்டும். முந்திய கால இலக்கியச் சுவைப்பிற்குத் தேவையானதும் மொழி வரலாற்றைத் தெரிந்துகொள்ளத் தேவையானதுமான வழக்கிறந்த அருகிய வழக்குச் சொற்களின் இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வி அறிவியல் கல்விபயிலும் மாணவர்களுக்குத் தேவை இல்லாததாக இருக்கலாம்.

எனவே இலக்கணக்குறிப்பு பற்றிய பாடத்திட்டத்தில் நிகழ்காலப் பயன்பாட்டு மொழிக்கு இடமளித்தல் வேண்டும். அதன் பின்னரே வழக்கிறந்த அன்றி அருகிய வழக்குடைய சொற்களின் இலக்கணக்குறிப்பு பற்றிய பாடத்திட்டம் இடம்பெறல் வேண்டும். இந்நிலையில்தான் மாணவர்கள் இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வியில் தெளிவு பெறுவார்கள்.

சான்றாகச் 'செய்யாது' என்ற வினையெச்ச அமைப்பினைத் தெளிவுபடுத்த இக்காலத்தில் பெரிதும் வழங்கப்பெறும் 'செய்யாமல்' என்ற வினையெச்ச அமைப்பினை விவரித்துப் பின்னர் பண்டை இலக்கியங்களில் இவ்வாய்பாடு 'செய்யாது' எனும் அமைப்பில் இருந்தமையினை மாணவர்களுக்கு விவரித்தால் எளிமையாகப் புரிந்துகொள்வர். இதனைப் போன்று ஒவ்வொரு சொல்வகையின் பிரிவுகளையும் தெரிந்தவற்றை விவரித்துத் தெரியாதனவற்றை விளங்கவைக்க இயலும்.

இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வி முழுமை பெறாமைக்குப் பாடத்திட்டமும் ஆசிரியர்களுமே அடிப்படையாகும். ஆசிரியர்கள் இலக்கணக்குறிப்பினை அறிமுகம் செய்வதன் நோக்கத்தையும் கற்பிக்கும் நெறிமுறைகளையும் முறையாகத் தெரிந்துகொள்ளாமையே மாணவர்கள் இலக்கணக்குறிப்பினை முற்றிலுமாக ஒதுக்கிடுவதற்குக் காரணமாக அமையப்பெற்றுள்ளது.

இலக்கணக்குறிப்பு பற்றிய பாடத்திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட பெயரினை அறிமுகம் செய்யும் நிலையில் பெயர்

என்றால் என்ன என்பதையும் பெயர் வகைகளையும் அறிமுகப்படுத்தி ஒவ்வொரு பெயர்களுக்கிடையே காணப்பெறும் முறையான முரண்களை **(Contrast)** விவரித்துப் பின்னர் பாடத்திட்டத்தில் அறிமுகம் செய்யப்பெறும் பெயரின் தனித்தன்மைகள் விவரிக்கப்பெறும் நிலையில்தான் அப்பெயரினை மொழிவழக்காற்றினில் மாணவர்களால் எளிதில் கண்டறிய முடியும்.

எனவே பாடத்திட்டம் வரன்முறைப்படுத்தப்பட்டு இலக்கணக்குறிப்பு முறையாக அறிமுகம் செய்யப்பெறல் வேண்டும். முந்தைய ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பெற்ற சொல்வகைகளின் பிரிவுகள் ஒவ்வொரு ஆண்டிலும் மாணவர்களுக்கு நினைவுபடுத்தப் பெற்றால்தான் மாணவர்கள் இலக்கணக் குறிப்பு பற்றிய கலைச்சொற்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் இயலும்.

இலக்கணக் கலைச்சொற்களை ஆசிரியர்கள் அறிமுகம் செய்வதற்கு எளிமையான முறைகளைக் கையாளுதல் வேண்டும். வினைத்தொகையினை அறிமுகம் செய்யும் நிலையில் காலங்கடந்த பெயரெச்சமே வினைத்தொகை என இலக்கணநூற்பாவினை மேற்கோள் காண்பித்தல் கூடாது. இந்நூற்பாவில் வரும் கடந்த எனும் சொல்லின் பொருளினைப் புரிந்துகொள்ள இயலாத மாணவர் வினைத்தொகையினைப் புரிந்துகொள்ளுதல் இயலாது.

ஈண்டு வினைத்தொகையினையும் பெயரெச்சத்தினையும் ஒப்பிட்டு, காலமும் எச்சவிகுதியும் வினைத்தொகையில் தொக்கு வருவதனை விவரிக்கலாம். மேலும் வினைத்தொகை எவ்வாறு தொகையாகச் செயல்படுகின்றது என்பதனையும் காலப்பொருண்மை தொக்குவருகின்ற தொகையாக இது அமைவதால் வினைத்தொகை என அழைக்கப்பெறுவதனையும் விவரித்தல் வேண்டும்.

இலக்கணக் கலைச்சொற்களை அறிமுகம் செய்யும்போது சொல்வகைப் பாகுபாட்டினை ஆசிரியர் முழுமையாக விவரித்து அப்பாகுபாட்டில் தான் அறிமுகப்படுத்தும் கலைச்சொல்லின்

இடத்தையும் முதலில் விளக்கிடல் வேண்டும். பின்னர் சான்றுகளை விவரிக்கும் நிலையில் இக்கால மொழியமைப்பிலிருந்து பண்டைக்கால மொழியமைப்பிற்கு வருதல் வேண்டும். தாம் அறிந்த முறைகளைக் கையாண்டு எளிமைப்படுத்துவதையே ஆசிரியர்கள் குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலக்கணக் கலைச்சொற்களை மொழியியல் அடிப்படையில் விவரித்தால் எளிமையாகப் புரிந்துகொண்டு மாணவர்கள் தெளிவுபெறுவர். இவ்வடிப்படையில் தொழிற்பெயர் ஒன்றினை மட்டுமே சான்றாகக் கொண்டு விளக்கம் தரப்பெறுகின்றது.

முதலில் மாணவர்களுக்குத் தொழிற்பெயரின் விளக்கத்தினைக் கொடுப்பதற்கு முன்னர் பெயரின் விளக்கத்தினைக் கூறி அதில் தொழிற்பெயரின் இடத்தினை விவரித்தல் வேண்டும். பெயர்களைத் தொடரியல் நிலையில் வினையெச்சம், வினையடை ஆகியவற்றால் சிறப்பிக்கப்பெறும் பெயர்கள் எனவும், பெயரடை, பெயரெச்சம் ஆகியவற்றால் சிறப்பிக்கப்பெறும் பெயர்கள் எனவும் இருவகைப்படுத்துதல் இயலும். இவற்றுள் தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் வினையெச்சம், வினையடைகளால் சிறப்பிக்கப் பெற்றுவர, ஏனைய பெயர்கள் அனைத்தும் பெயரெச்சம், பெயரடைகளால் சிறப்பிக்கப்பெற்றுவரும்.

இதனையடுத்து ஆசிரியர் தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்குமிடையே காணப்பெறும் வேறுபாட்டினைப் புலப்படுத்தியாதல் வேண்டும்.

பொருண்மைநிலையில் தொழில் நிகழ்வினைச் சுட்டும் பெயர் தொழிற்பெயர் எனவும் தொழிலைச் செய்யும் கருத்தாவினைச் சுட்டும் பெயர் வினையாலணையும் பெயர் எனவும் குறிப்பிடலாம். அமைப்புநிலையில் தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்குமிடையே வேறுபாடுகள் சில காணப்பெற்றாலும் இக்காலத் தமிழில் இவற்றிடையே வேறுபாடு காணப்பெறுவதில்லை. எனவே

மாணவர்கள் இவற்றை முறையாக வேறுபடுத்திக் காண ஆசிரியர்கள் துணைபுரிய வேண்டும்.

தொழிற்பெயர்களை அடிப்படை நிலையில் முதனிலைத் தொழிற்பெயர்கள் எனவும் விகுதிபெற்ற தொழிற்பெயர்கள் எனவும் பகுத்தல் இயலும். முதனிலைத் தொழிற்பெயர்கள் என்ன என்பதனை விளக்குவதற்கு முன்னர் முதனிலை என்றால் என்ன என்பதனை இடைநிலை, இறுதிநிலை என்பவற்றோடு ஒப்பிட்டு விவரித்து முதனிலை திரியும்போது இவை முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனவும் பெயர்பெறும் என்பதனைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

முதனிலையும் தொழிற்பெயர் விகுதியும் இணைந்து விகுதிபெற்ற தொழிற்பெயர்கள் அமையப்பெறும் முதனிலைத் தொழிற்பெயர்களும் விகுதிபெற்ற தொழிற்பெயர்களும் தொழிலின் நிகழ்வினை மட்டும் சுட்டிக் காலப்பொருண்மை யின்றி வரும்.

பள்ளி மாணவர்களது நூல்களில் 'வாழ்தல்', 'வாழ்க்கை' எனும் இரண்டு வடிவங்களும் தொழிற்பெயர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன ஆனால் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் சிலர் இவ்விரு வடிவங்களிடையே காணப்பெறும் வேறுபாட்டினை அறியவந்துள்ளனர்.

'சிறந்த வாழ்க்கை' என வாழ்க்கை எனும் வடிவம் பெயரெச்சத்தாலும் 'சிறந்து வாழ்தல்' என வாழ்தல் எனும் வடிவம் வினையெச்சத்தாலும் சிறப்பிக்கப்பெற்று வருதலைக் காணமுடிகின்றது. 'வாழ்க்கை' என்பது ஒரு தொழிலது பெயராக **(name of an action)** அமைந்து தொழிற்பெயரல்லாப் பெயராகவும், 'வாழ்தல்' என்பது தொழிலின் நிகழ்வினைச் **(doing of an action)** சுட்டும் தொழிற்பெயராகவும் செயல்படுகின்றன.

இடைக்காலத்தமிழிலும் இக்காலத் தமிழிலும் வினையாலணையும் பெயரின் அமைப்பினைக் கொண்ட தொழிற்பெயர்கள் மொழியில் செயல்படுவதனைக் காணமுடிகின்றது. பள்ளிப் பாடத்திட்டத்தில் இக்காலப்

படைப்பிலக்கியங்களும் இடம் பெற்றுள்ளமையால் இத்தகைய தொழிற்பெயரமைப்புகளையும் தெரிந்து கொள்ளுதல் தேவையாகின்றது.

'கண்களால் பேசுவதைத் தவிர்த்தனையோ' என்பதில் பேசுவது எனும் வடிவம் தொழிற்பெயராகச் செயல்படுகின்றது. மேலும் இது காலப் பொருண்மையினையும் சுட்டுகின்றது. இத்தகைய தொழிற்பெயர்களைப் பொருண்மைநிலையில்தான் வினையாலணையும் பெயர்களினின்று வேறுபடுத்திக் காட்டுதல் இயலும்.

மேலும் மொழியில் மையீற்று வடிவங்களும் தொழிற்பெயர்களாகச் செயல்படுவதுண்டு. வருதல், வந்தமை எனும் இருவகைத் தொழிற்பெயர்களை ஒப்பிட்டுக் காணுங்கால் வந்தமை என்ற பெயர் வருதல் தொழிலோடு வருதலின் முறைமையினையும் இறந்த காலத்தையும் சுட்டுவதனை அறியமுடிகின்றது. இத்தகைய பெயர்களை வினைப்பண்புப்பெயர்களாகவும் சிலர் கருதுகின்றனர். ஈண்டுச் சில மாணவர்கள் தொழிற்பெயர்கள் காலங்காட்டுதல் இல்லை என்ற அடிப்படையில் இதனைத் தொழிற்பெயராகக் கருதுதல் இல்லை.

இக்கால மொழியியலார் முதனிலைத் தொழிற்பெயர்கள், முதனிலை திரிந்த தொழிற்பெயர்கள், விகுதிபெற்ற தொழிற்பெயர்கள் ஆகிய மூன்றும் அனைத்துச் சூழல்களிலும் தொழிற்பெயர்களாகச் செயலாற்றுதல் இல்லை என்பதனையும் சிலவிடத்து இவை தொழிலின் நிகழ்வினைச் சுட்டாது தொழிலது பெயரினை மட்டுமே சுட்டி, தொழிற்பெயரல்லாப் பெயர்களாகச் செயல்படும் என்பதை நிறுவியுள்ளனர்

**அவனுக்கு அடி** விழுந்தது (தொழிற்பெயரல்லாப் பெயர்)
**பிணிபட்டோனை அடி** இன்னா
(அடித்தல் - முதனிலைத் தொழிற்பெயர்)
**பாட்டு** மிகவும் அருமை (தொழிற்பெயரல்லாப் பெயர்)
**இரவில் பாட்டு** இன்னா
(பாடுதல் - முதனிலை திரிந்த தொழிற்பெயர்)

**பிழைத்தல்** பொறுத்தல் பெருமை (பிழை-தொழிற்பெயரல்லாப் பெயர்)

பாடிப் **பிழைத்தல்** (தொழிற்பெயர்)

மொழியமைப்பினை மொழியியல் அடிப்படையில் விவரிக்கும் நிலையில்தான் மாணவர்களின் ஐயம் முற்றிலுமாக நீக்கப்பெறும். சான்றாகப் 'பொன்குடம்' என்பதனைப் 'பொன்-ஆல் செய்த குடம்' என விரித்து மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை என இலக்கணக்குறிப்பு குறிப்பிடும் நிலையில் 'பொன்மேனி' என்பதனைப் 'பொன்-ஐப்' போன்ற மேனி என விரித்து இதுவும் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை என ஏன் கருதுதல் கூடாது எனக் கூறும் மாணவனுக்குத் தக்க விடையளிக்க மொழியியல் மிகவும் தேவையாகின்றது.

இதனைப்போலவே 'செய்யா' என்பதே காலத்தால் முந்திய வடிவம் எனவும் 'செய்த' என்பதன் ஒப்புமையாக்கத்தால் தான் 'செய்யாத' என்பது பிற்காலத்தில் தோன்றியது எனவும் அறிந்துகொண்ட மாணவன் 'செய்யா' என்பதனை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனச் சுட்டுவது தவறு என விளக்கம் கேட்கும் நிலையில் ஆசிரியர் சிக்கலான நிலைக்குத் தள்ளப்படுவார். எனவே மொழியமைப்பில் நடைபெற்ற மாற்றங்களை முறையாக விவரிக்கும் வகையில் பாடத்திட்டத்தில் மொழியியல் அடிப்படையில் அமைந்த இலக்கணக் கலைச் சொற்களின் விளக்கங்கள் கட்டாயமாகத் தேவைப்படுகின்றன.

எனவே தொழிற்பெயரின் விளக்கம், அதன் வகைகள், அதன் அமைப்பு, அதற்கும் பிறவகைப் பெயர்களுக்குமிடையே காணப்பெறும் வேறுபாடு போன்றவற்றை முழுமையாகத் தெரிந்துகொள்ளும் நிலையில்தான் மாணவர்கள் மொழிப் பயன்நிலையில் தொழிற்பெயர்களின் வருகையினை அனைத்துச் சூழல்களிலும் கண்டறியும் திறனைப் பெற்று விளங்குவர்.

இலக்கணக் குறிப்பு மாணவர்களின் பாடத்திட்டத்தில் சிறப்புற அமையவில்லை என்பதற்குப் பல்வேறு எடுத்துக்காட்டுக்கள் தரவியலும் நிலை இருப்பினும் தமிழ்நாடு

பாடநூல் நிறுவனம் 1997 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள பத்தாம் வகுப்புத் தமிழ் நூலின்கண் காணப்பெறும் இலக்கணக்குறிப்புப் பகுதியில் ஒருசில இவண் குறிப்பிடப்பெறுகின்றன.

ஈண்டு 'வெள்ளையணை' (பக்.110) 'தாய்ப்பால்' (பக்.74) என்பனவற்றிற்கு இருபெயரொட்டுப் பண்புத்தொகை என இலக்கணக்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. 'பொறிமயிர்' (பக். 78) 'பொதிர் கொள்' (பக். 64) 'கொல்கை' (பக். 58) என்பன வினைத்தொகையின் பாற்படட்டவைகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. 'பொற்காலம்' (பக். 105) 'திருவாசகம்' (பக். 70) ஆகியனவற்றிற்கு இலக்கணக் குறிப்பாகப் பண்புத்தொகை சுட்டப்பட்டுள்ளது.

'உவப்ப' எனும் சொல் பெயரெச்சமாகக் (நரைமுதுமக்கள் உவப்ப நரைமுடித்து, பக்.31) குறிக்கப்பட்டுள்ளது. 'வினவுதி' (பக்.75) எனும் சொல் இலக்கணக்குறிப்பில் தொழிற்பெயரினதாகவும், பகுபத உறுப்பிலக்கணம் கூறும் நிலையில் இச்சொல்லிற்கு 'வினவு' என்பதனைப் பகுதி எனவும் 'தி' என்பதனைத் தொழிற்பெயர் விகுதி எனவும், அருஞ்சொற்பொருள் சுட்டும் பகுதியில் 'கேட்பீர்' என முன்னிலை வினைமுற்றுப் பொருளும் சுட்டப்பெற்றுள்ளது.

கூட்டம் எனும் பொருளில் செயல்படும் 'மாநாடு' (பக்.95) எனும் சொல்லிற்கு உரிச்சொற்றொடர் என இலக்கணக்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இதனைப் போன்றே 'வறுமை எனும் கொடிய நோய்' (பக்.98) எனும் தொடருக்கு உருவகம் என்னும் இலக்கணக்குறிப்பு குறிக்கப்பட்டுள்ளது

இத்தகைய குறிப்புக்களால் மாணவர்களின் அடிப்படை இலக்கணச் சிந்தனை தடுமாற்றத்திற்குள்ளாகிவிடுகின்றது. இதன் காரணமாக முறையான கலைச்சொல் விளக்கங்களைத் தவிர்த்து மனப்பாடம் செய்யும் நிலைக்கு மாணவர்கள் தள்ளப்படுகின்றார்கள்.

ஒரு சொல்லுக்கு அமைப்பு, பயன் ஆகிய நிலைகளில் இருவகைக் குறிப்பு சுட்டப்பெறும் வாய்ப்பு இருக்கும்போது வினாத்தாளில் சொல்லின் சூழல் தெளிவாகக் கொடுக்கப்பெறல் வேண்டும்.

பற்றல் - தொழிலாகுபெயர் (பக்.64)

இச்சொல்லுக்குத் தொழிற்பெயர் என்ற குறிப்புதான் பெரும்பான்மை மாணவர்களால் சுட்டப்பெறுகின்றது. ஈண்டு ஆகுபெயர் பற்றிய குறிப்பினை மாணவர்கள் புரிந்தகொள்ள வேண்டுமானால் சொல்லின் சூழல் தெளிவாகச் சுட்டப்பெறல் வேண்டும்.

*இலக்கணக்குறிப்பு வினாத்தாளில் இடம்பெறும் நிலையில்* சீர்மை. பின்பற்றப் பெறல் வேண்டும்.

குறைவிலா மடந்தை - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் (பக்.70)

ஒடுங்கிய ஏலும்பு - பெயரெச்சத் தொடர் (பக்.70)

ஓரிடத்தில் பெயரெச்சத் தொடர் எனவும் பிறிதோர் இடத்தில் பெயரெச்சம் எனவும் இலக்கணக்குறிப்பு கொடுப்பதனைத் தவிர்த்தால் மாணவர்கள் குழப்பமடையாமல் இருப்பர். மேலும் இலக்கணக்குறிப்பினைத் தெளிவாகப் புரிந்து. தெரிந்துகொள்ளும் வகையில் தொடர் அன்றி வாக்கியம் கொடுக்கப்பெற்று மாணவர்கள் இலக்கணக்குறிப்புத் தரவேண்டிய பகுதியினை அடிக்கோடிட்டுக் காண்பிக்கும் முறையே வரவேற்கத்தக்கது.

மொழி ஆய்வின் வளர்ச்சியினால் கண்டறியப்பெறும் புதிய கோட்பாடுகளுக்கேற்ப இலக்கணக்குறிப்பின் விளக்கங்கள் மறுபரிசீலனை செய்யப்பெற்றாதல் வேண்டும். எளிமைப்படுத்தும் மொழியியல் அடிப்படையில் அமைந்த கலைச்சொற்களின் விளக்கங்களே மாணவர்கள் மனதில் இலக்கணக்குறிப்பு பற்றிய விளக்கங்களை நிலைநிறுத்தச்செய்யும். மேலும் சொல்வகைகளிலும், அவற்றின் வகைகளிலும், தொடர் வகைகளிலும் மாணவர்கள் முழுமையான அறிவுபெறும் நிலையில்தான் அவர்கள் மொழிப்புலமை பெற்று மொழியைச் சிறப்பாகக் கையாளும் திறன் பெறுவர்.

இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வி வீழ்ச்சியடைவதற்குப் பாடத்திட்டம் மட்டுமின்றி ஆசிரியர்களும் சிறப்பிடம்

வகிக்கின்றனர். ஆசிரியர்கள் பலர் இலக்கணக்குறிப்பினை முறையாகக் கற்பிப்பதில் ஆர்வம் காண்பிப்பதில்லை. மேலும் எளிமையான கற்பிக்கும் நெறிமுறைகளையும் பின்பற்றுவதில்லை.

பாடத்திட்டம், ஆசிரியர்கள் ஆகியவற்றைத் தவிர்த்துச் சூழலும் இலக்கணக் குறிப்புக் கல்வி வீழ்ச்சியடைவதற்குக் காரணமாக அமையப்பெற்றுள்ளது. பள்ளி, கல்லூரிகளில் மொழிக்கல்வி மிகவும் பின்னடைவு பெற்றுள்ளது என்பதால் மாணவர்கள் மொழிக்கல்வியின் ஒரு கூறாகிய இலக்கணக்குறிப்பில் ஆர்வம் காட்டாமலிருத்தல் வியப்பில்லை.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தேர்வுமுடிவு வகுப்பினை முடிவுசெய்ய மொழிக்கல்வி மதிப்பெண்கள் கருத்தில் கொள்ளப்பெறாமையும், அறிவியல் போன்ற பிறதுறைகளின் பாடக்கல்வியில் மொழித்தவறுகள் கண்டுகொள்ளப்பெறாமையும், மருத்துவம், தொழில்நுட்பவியல் போன்ற உயர்கல்விக்கு மொழிக்கல்வி மதிப்பெண்கள் எடுத்துக்கொள்ளப்பெறாமையும், மாணவர்கள் மொழிக்கல்வியை முற்றிலுமாகப் புறக்கணிக்கும் சூழலை உருவாக்கிவிட்டது. இந்நிலையில் பாடத்திட்டத்தின் சீர்மையின்மையும், ஆசிரியர்களின் ஈடுபாட்டின்மையும் ஒட்டு மொத்தமாக இலக்கணக் கல்வியினை வேரோடு சாய்த்துவிட்டது எனத் தெரியவருகிறது.

■



# கனடா - அமெரிக்கா நாடுகளில் சில நாட்கள்

பேரறிஞர். பா. சூரியநாராயணன்

அமெரிக்காவில் வாஷிங்டனுக்கு அடுத்தாற்போல் காணத்தக்கது நியூயார்க் துறைமுக நகரமாகும். இந்நகரத்தை நாங்கள் மாலை நேரத்தில் அடைந்தபோது, குளிர் இல்லாவிட்டாலும், மழை பெய்து கொண்டிருந்தது. உலகிலேயே தொழிலும், வாணிபமும், பணப்புழக்கமும் மிக்க நகரமாகிய நியூயார்க், 1667-ஆம் ஆண்டுவரை டச்சுக்காரர் வசம் நியூஆம்ஸ்ட்டர்டாம் என்ற பெயருடன் இருந்தது. வாணிபப் போட்டியின் காரணமாக நெதர்லண்ட்ஸ் நாட்டிற்கும் இங்கிலாந்து நாட்டிற்கும் இடையே நடந்த இரண்டாம் டச்சுப்போரில் கடற்படைத்தளபதியாகப் பங்கு எடுத்துக்கொண்ட ஆங்கில அரசரின் தம்பியும், யார்க் பிரபுவுமான ஜேம்ஸ் வெற்றிபெற்றார் 1667, பிரடா ஒப்பந்தப்படி டச்சுக்காரர் நியூஆம்ஸ்ட்டர்டாமை இங்கிலாந்துக்கு அளித்தனர்; அரசரின் தம்பி யார்க் பிரபுவுக்கு மதிப்புத்தரும் பொருட்டு ஆங்கிலேயர் நியூஆம்ஸ்ட்டர்டாம் என்பதை நியூயார்க் என்று வழங்கலாயினர். இப்பொழுதும் அந்நகரத்தில் பல ஐரோப்பிய நாட்டினரோடு டச்சு வணிகரும் காணப்படுகின்றனர். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் முன்னோர் அங்குக் குடியேறியிருந்த டச்சுவணிகர்களே ஆவர். இப்பொழுது அந்நகரில், இந்தியர் உட்பட உலகின் எல்லா நாடுகளிலிருந்தும் தொழில் முனைவோர் இருக்கின்றனர். வணிகர் தெருவில் இருபுறங்களிலும் இத்தாலிய, ஜெர்மன், பிரஞ்சு, ஸ்பானிஷ் ஆங்கில நாட்டினருடைய வணிக நிலையங்களிருக்கின்றன. இத்தாலியரொருவருடைய விடுதிமுகப்பில் லியனார்டோ டாவின்சி, ரஃபேல், மைக்கேல் அஞ்செலோ முதலிய இத்தாலியப் புலவர்கள், கலைஞர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. நம் நாட்டில் தொழில், வணிக நிலையங்களைத் திருவள்ளுவர், இளங்கோ, கம்பர் போன்ற நல்ல புலவர்களின் பெயர்களால் அழைத்தால் என்ன?

**நியூயார்க் வால்தெரு பங்குச்சந்தை:**

நியூயார்க் கடற்கரையை ஒட்டிய ஒரு துறைமுக நகரம். அங்கு உள்ள புருக்லின் பிரிட்ஜ் என்ற வளைவுப்பாலம், வானளாவிய கோபுரங்களைத் தாங்கிய கட்டடங்கள், அவற்றினூடே செல்லும் நீண்ட சாலைகள், வெள்ளை வெளேரென்று தோன்றும் இரட்டைக் கோபுரம், எம்ப்பயர் ஸ்டேட் கட்டடம், உலகநாடுகளின் பொருள்வளத்தையே உருவாக்கும் மூலதனப்பங்குகளை வாங்குதலும், விற்றலும் நடைபெறும் பங்குச்சந்தை **(Stock Market)** இருக்கும் வால்தெரு, **(Wall Street)** உலக எண்ணெய் அரசர் **(Oil King)** எனப்படும் ராக்ஃபெல்லர் மாளிகை முதலியவை எல்லாம் காணத்தக்கவை. உந்து வண்டியை ஓட்டிக்கொண்டு எங்களுக்கு எல்லாவற்றையும் காட்டிக் கொண்டுவந்த வழிகாட்டி, "இதுதான் உலகப் புகழ்பெற்ற நியூயார்க் பங்குச்சந்தை இருக்கும் வால் ஸ்ட்ரீட்" என்றவுடன், அதில் எடுக்கப்படும் உலகப் பெரும் செல்வர்களின் முடிவுகளால் கடந்த காலத்தில் தோன்றிய பெரும் பொருளாதார அரசியல் விளைவுகளையெல்லாம் என் மனம் எண்ணிப்பார்த்தது.

எடுத்துக்காட்டாக முதலாம் உலகப்போரினிறுதியில் தோற்று, வலுவிழந்து கிடந்த ஜெர்மனிய நாட்டில் சீர்குலைந்து போயிருந்த பொருளாதாரத்தை சீர்திருத்துவதற்கு இந்தப் பங்குச்சந்தை வாயிலாக அமெரிக்க முதலாளிகள் முன்வந்தனர். இதனால் ஜெர்மனியின் பொருளாதாரம் கணிசமான அளவுக்குப் புத்துயிர் பெற்று வேலைவாய்ப்பும் மக்களுக்குக் கிடைத்தது. ஜெர்மனிக்காக வரையப்பட்ட வைமார் மக்களாட்சி அரசியலமைப்பும் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் செயல்பட்டது. ஆனால் இந்த வால்தெரு பங்குச்சந்தையில் 1929-ஆம் ஆண்டில் கிளம்பிய ஒரு வதந்தி அமெரிக்க டாலர் நாணயத்தின் மதிப்புக் குறையப்போகிறது என்ற ஒரு அச்சத்தை முதலாளிகளிடையே உண்டாக்கிவிட.. வெகுவிரைவாக அமெரிக்க மூலதனம் ஜெர்மன் தொழில்களிலிருந்து திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து தவித்தனர். வைமார் மக்களாட்சி அரசாங்கம் செயலற்றுப்போகவே, பொதுவுடைமையாளர்கள் தங்களுடைய அரசியல் செல்வாக்கை வலுவாக்க முயன்றனர் இச்சூழ்நிலையில் ஹிட்லருடைய தலைமையில் நாசிக்கட்சியினர் தங்களுடைய சர்வாதிகாரத்தை நிலைநாட்டக் கடும் முயற்சி செய்து 1933-இல் ஆட்சியைக்

கைப்பற்றினர் அதன்பின் நடந்தவைகளை உலகு அறியும்.

## சுதந்திர தேவியின் சிலை: (STATUE OF LIBERTY)

ஐரோப்பிய சர்வாதிகார் அரசாங்கங்களால் ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை இயக்கங்களின் தலைவர்களுக்கெல்லாம் புகலிடமாக இருந்து வருவது அமெரிக்கா. அதைக்காட்டும் அடையாளமாகச் சுதந்திரத்தீவு **(Island of Liberty)** என்னும் ஒரு சிறிய தீவில் வலது கையை உயரே நீட்டிய நிலையில் நிற்பது சுதந்திர தேவியின் சிலை ஆகும். இந்தச் சிலை கிழக்கே அட்லாண்டிக் மகாசமுத்திரத்தை நோக்கி அவ்வழியல் வரும் அயல்நாட்டவரை அமெரிக்காவுக்கு அழைப்பதாகக் கருதுகின்றனர். 18-ஆம் நூற்றாண்டினிறுதியில் பிரஞ்சுப் புரட்சியாளரால் புதிய சுதந்திரநாடாக உருவாகிய அமெரிக்காவுக்குப் பரிசாக அளிக்கப்பட்ட இந்தச் செப்புச்சிலை கிரேக்க சிற்ப வேலைப்பாடு அமைந்தது. இது ஃபிரடரக் ஏ பார்த்தோல்டின் என்பவரால் பிரான்சு நாட்டில் வடிவமைக்கப்பட்டது. சிலையைச் செய்வதற்கான செலவு பிரெஞ்சு மக்களிடமிருந்து நன்கொடையாகத் திரட்டப்பட்டது. இது நிற்கும் பீடத்தை அமைப்பதற்கு ஆகும் பொருளை அமெரிக்கர் திரட்டினர். இந்தச் சிலை ஒரு பெண்வடிவமாகும். இது நிற்கும் பீடத்தின் அல்லது மேடையின் அடியிலிருந்து 305 அடி உயரமுள்ள இந்தச் சிலையின் வலது கையில் சுதந்திரத்தின் அடையாளமாக மேலே தூக்கிப்பிடித்த நிலையில் ஒரு தீப்பந்தம் அமைக்கப்பட்டுள்ளது. பெண்ணின் இடதுகையில் ஒரு தட்டையான பலகையில் அமெரிக்க சுதந்திர விளம்பரம் கையெழுத்திடப்பட்ட நாள் பொறிக்கப்பட்டுள்ளது அவளுடைய காலடியில் உடைப்ட்ட விலங்குகள் கிடக்கின்றன. அமெரிக்க மக்களுடைய சுதந்திரப்பற்றையும், மக்களாட்சிப் பண்புகளையும் இந்தச்சிலை எடுத்துக்காட்டுவதோடன்றியும், உலகநாடுகளின் சுதந்திர, மக்களாட்சி மரபுகளின் காவலனாகவும், அந்நாட்டைக் காட்டுகிறது. இவ்வுயரிய கருத்தைக் கூறும் ஒரு செய்யுளின் கருத்து வருமாறு:

"உங்கள் நாட்டின் கரையில் மிகுதியாகக் காணப்படுகிற, மகிழ்ச்சி இழந்த, ஒதுக்கப்பட்ட, வீடற்ற, என்னிடத்துப் புயல்போல் தூக்கி எறியப்பட்ட, சுதந்திரக்காற்றை சுவாசிக்கத் துடிக்கின்ற உங்களுடைய களைத்துப்போன வறியவர்களை என்னிடம் வரவிடுங்கள். நான் சுதந்திரத்தின் பொற்கதவின் மருங்கே எனது விளக்கை ஏந்திக் காட்டுகிறேன்".

எவரையும் ஈர்க்கும் இவ்வுயரிய நற்செய்தியை ஒரு சிறுகவிதை வடிவத்தில் எழுதியவர் எம்மா லாசரஸ் என்பவராவார் இது ஒரு தட்டில் வரையப்பட்டு 1903-ஆம் ஆண்டிலிருந்து சிலையின் பீடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த சுதந்திர தீவுக்கு நியூயார்க் துறைமுகத்திலிருந்து அவ்வப்போது விசைப்படகுகள் போய்வருகின்றன சிலை நிற்கும் நிலத்தின் கீழ் ஓர் உள்ளறையில் அமெரிக்க வரலாற்றின் பல நிகழ்ச்சிகளைக் காட்டும் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

**ஐக்கிய நாடுகள் சபை:**

நியூயார்க் துறைமுகத்தின் கரையை ஒட்டியுள்ள அனைத்து நாடுகள் நிலத்தில் **(International Territory)** அமைந்துள்ள ஐ.நா.சபையின் கட்டடங்களுக்கும் சென்று பார்க்காவிட்டால் நமது நியூயார்க் பயணம் முற்றுப்பெறாது. இந்தப் பன்னாட்டு நிலத்தில் எல்லா உறுப்பு நாடுகளின் கொடிகளும் பறக்கின்றன. இப்போது 188 உறுப்பு நாடுகளை உடைய இம்மாபெரும் சபையின் செயலகக் கட்டடம் **(Secretariat)** பல அடுக்கு மாடிகளை உடையது எங்கிருந்து பார்த்தாலும் இதை எளிதில் எவரும் காணத்தக்கதாக பல உயர்ந்த கட்டடங்களுக்கு நடுவே செங்குத்தாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஒரு பெரிய பருத்த புத்தகம் போலக் காட்சி அளிக்கிறது. அதன் அருகில் பொதுச்சபை, **(General Assembly)**, பாதுகாப்புச்சபை **(Security Council)**, அறங்காவலர் குழு **(Trusteeship Council))**, பொருளாதார சமூகக்குழு **(Economic and Social Council)** முதலியவை கூடும் அகன்ற மண்டபங்கள் இருக்கின்றன. பொதுச்சபை கூடும் பெரிய மண்டபத்தின் கீழ்த்தளத்தை அதன் மேல்தளத்தின் தாழ்வாரத்தில் நின்று பார்த்தல் வேண்டும். சிறு நுழைவுக்கட்டணம் செலுத்திச் சீட்டுவாங்கி, பார்வையாளர்கள் 15 பேரடங்கிய சிறு கூட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றனர் சிறிது பொழுது அமர்ந்து காத்திருந்த பின், எங்கள் கூட்டத்தின் வழிகாட்டியாக வந்த ஒரு சிறு அமெரிக்கப் பெண் எங்களை கீழ்த்தளத்தில் ஒரு அறைக்கு அழைத்துப் படங்களைக்காட்டி அவற்றை விளக்கினாள் . அவை 1945-ல் அமெரிக்க அணுகுண்டுகளினால் அழிக்கப்பட்ட ஹிரோஷிமா, நாகசாகி என்னும் இரு ஜப்பானிய நகரங்களின் நிலைகளையும், அவற்றில் பல உடலுறுப்புக்களை இழந்து துன்புறும் மக்களைக்

காட்டுபவை. இவற்றைவிடப் பார்ப்போர் எவரையும் மனமுருகச் செய்யும் காட்சி, அதனருகில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு சிலையின் முதுகுப்புறந்தான் அதில் காணப்படும் நெருக்கமான பல கொப்புளங்கள் வெடித்த அணுகுண்டுகள் வீசிய நெருப்புக்கோளங்களால் உண்டானவை. எவர் மனத்தையும் கரையச் செய்யும் இக்காட்சியைக் கண்டோம். பின் மெல்ல மவுனமாக நகர்ந்து சென்று, ஏற்றத்தின் வழியே மேல்தளத்திற்குச் சென்றோம். பாதுகாப்புச் சபை மட்டும் கூடியிருந்து, டிமோர் **(Timor)** நாட்டு மக்களின் சுதந்திரக்கோரிக்கையை விவாதித்துக் கொண்டிருந்தது. மற்ற அமைப்புகளில் நடவடிக்கை ஒன்றும் நடைபெறவில்லை.

### பாஸ்ட்டன் துறைமுக நகரம்:

அடுத்து நாம் காண்பது நியூயார்க்கின் தென்கிழக்குக் கரையிலுள்ள பாஸ்ட்டன் துறைமுகம். மஸ்ஸாச்சுசெட் மாநிலத்தின் தலைநகரமாகிய இதன் பெயரைச் சொன்னவுடன் அமெரிக்கப்புரட்சி அல்லது அமெரிக்கச் சுதந்திப்போரின் தொடக்க நிகழ்ச்சியான "பாஸ்ட்டன் தேநீர் விருந்து" நம் நினைவுக்கு வருகிறது. அமெரிக்கர், பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த போது அங்கு இறக்குமதியாகும் தேயிலை மீது பிரிட்டிஷ் அரசாங்கம் சுங்கவரி விதித்தது. தங்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட சுங்கத்தைக் கட்டமறுத்து, அமெரிக்கா, பாஸ்ட்டன் துறைமுகத்தில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தேயிலையைத் தூக்கிக் கடலில் எறிந்துவிட்டனர் அருகில் ஒரு கட்டடத்தில் நிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷ் போர்வீரர்கள் அமெரிக்கர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த, சுதந்திர விளம்பரம் செய்யப்பட்டு, புரட்சி தொடங்கி, இறுதியில் அமெரிக்கர் வெற்றிபெற்று முழுச்சுதந்திரம் பெற்றனர். சமயம், அரசியல் முதலியவற்றில் மிகவும் தீவிரமாக இருந்து சுதந்திரம் பெற்ற பியூரிட்டன் **(Puritan)** மாநிலங்களுள் மஸ்ஸாச்சுசெட்ஸ்ஸும் ஒன்று. தேயிலையை ஏற்றிவந்த 18-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட சிறிய பாய்மரக்கப்பல் பாஸ்ட்டன் துறைமுகத்தில் பார்வையாளருக்காக இப்பொழுதும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. பாஸ்ட்டனில் உள்ள பெரிய முருகன் கோயில் ஒவ்வொரு நாளும் பலர் வழிபாட்டிற்காகக் கூடும் இடம். பாஸ்ட்டன் பல்கலைக்கழகம், ஹார்வர்ட் பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் முதலியவை பார்க்கத்தக்கவை.

பார்வையாளர்களை ஏற்றிக்கொண்டு நகரம் முழுதும் சுற்றி வந்த பேருந்து ஓட்டுனரின் இருக்கைக்குப் பின்புறம் பயணிகள் பார்வையில் படும்படி வைக்கப்பட்டிருந்த பெரிய அறிக்கைப் பலகை "பரிசுகள் நல்லுணர்வுடன் ஏற்றுக்கொள்ளப்படும்" **("Gratuities will be appriciated")** என்று கூறிற்று! எவ்வளவுதான் வேலைவாய்ப்புக்களும், வருமானங்களும், வசதிகளும் பெருகிய ஒரு நாடாயினும், அங்கும் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்குக் கூடுதலாக விடுதிகளில் சுமைதூக்குவோருக்கும், உணவை விடுதி அறைகளில் கொண்டு வருவோருக்கும் பரிசுகள் கொடுத்தல்வேண்டும். கொடுக்காவிடில் மறுபடி அழைத்தால் உதவிக்கு வரமாட்டார்கள்.

மீண்டு திரும்பும்போது செயின்ட் காதரைன் நகரில் தங்கி இருக்கும் போது அக்டோபர் 30-ஆம் நாள் மாலையில் ஒவ்வொரு வீட்டிலும் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி அம்மக்களுக்குத் தீய ஆவிகளிடமுள்ள ஒரு அச்சவுணர்வைக் காட்டிற்று. அந்நாளில் தீய ஆவிகளை வீட்டிற்கு வராமல் விரட்டும் பொருட்டும் பெரிய பூசணிக்காயின் தோலை நீக்கி, அச்சமூட்டும் வடிவமுடைய மனித முகத்தை அதில்வரைந்து வெளியில் வாயில் புறத்தில் வைக்கின்றனர். பல சிறுவர், சிறுமியர் வேடிக்கையான முகமூடி அணிந்து, கூட்டங்கூட்டமாக ஒவ்வொரு வீட்டின் வாயிலிலும் வந்து நின்று வாழ்த்துக்கூறுகின்றனர். வீட்டிலுள்ளோர் வந்து அவர்களுக்குத் தங்கள் பையிலிருந்து சாக்லேட் முதலிய தின்பண்டங்களை அளிக்கின்றனர். வந்தோரும் தங்கள் பையிலிருந்து தின்பண்டங்களை அளிக்கின்றனர்

அந்நாடுகளில் தங்குவதற்காக அளிக்கப்பட்ட காலஅளவு முடிந்தது. நாங்கள் வந்த வேலையும் முடிந்தது. மீண்டும் டொரான்ட்டோ விமானநிலையம் மீண்டும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் வானூர்தியில் 9 மணிநேரம் பறந்து பயணம், லண்டனில் 8 மணிநேரம் காத்திருந்து, மீண்டும் அதன் தொடர் வானூர்தியில் பயணம். சென்னையை நெருங்க நெருங்க தமிழில் அறிவிப்புகளைக் கேட்டோம், நவம்பர் 10-ஆம் நாள் காலையில் 3-45 மணிக்கு சென்னை வந்து தமிழ் மண்ணில் மகிழ்ச்சியுடன் கால் வைத்தோம். ஒவ்வொரு நாடும் சிறப்பான, மகிழ்ச்சியான வாழ்க்கையைக் குறிக்கோளாக வைத்து இயங்குகிறது. இதில் கணிசமாக வெற்றிபெற்று, நமக்கு முன்மாதிரியாக விளங்கும் இப்புதிய நாடுகளுக்கு நாம் வாழ்த்துக் கூறுவோம்.!

■

# ச.து.சு.யோகியார்

ஆசிரியர் : **எஸ்.ஆர். அசோக்குமார்**

வெளியீடு : சாகித்திய அக்காதெமி,
ரவீந்திரபவன்,
35, பெரோஸ்ஷா சாலை,
புதுதில்லி - 110 001.

விலை : **ரூ. 25-**

'சொல்லினாலே கவி சொல்ல வந்தேன்' என்று கவிபாடிய ச.து.சு.யோகியார் என்றறியப்பட்ட சங்ககிரி துரைசாமி சுப்பிரமணிய யோகியார், இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களிலே குறிப்பிடத்தகுந்தவர். பன்மொழிப் புலமை பெற்றவர், கவிதை, இசைப்பாடல்கள், கட்டுரை, கதை, நாடகம், திரைப்படம் என்று பல்துறை வித்தகராக விளங்கியவர்

"ச.து.சு.யோகியார்" என்னும் இந்நூல், யோகியாரின் வாழ்க்கை வரலாற்றினை, பிறப்பும் வளர்ப்பும், யோகியாரின் படைப்பிலக்கியம், யோகியாரும் திரைப்படமும், யோகியாரின் வெளிவராத எழுத்துக்கள், கம்பனும் யோகியாரும், யோகியாரின் பார்வையில் பாரதி, சான்றோர்களின் திறனாய்வு, பரிசுகள், மறைவு என்று பல்வேறு பகுதிகளாகப் பிரித்து நன்கு விளக்குகிறது.

யோகியார், 1904 ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் நாள் கேரளாவில் உள்ள எல்லப்பள்ளி எனும் கிராமத்தில் துரைசாமி-மீனாட்சி அம்மாளின் மகனாகப் பிறந்தவர்.

"இவர் தொடாத துறை ஒன்றுமில்லை; தொட்டதுறையை அழகுபடுத்தாமல் விட்டதில்லை" என்று சொல்லுமளவிற்குப் பல்துறை வித்தகராய்த் திகழ்ந்துள்ளார். இவர் 'பாலபாரதி'ப் பட்டம் பெற்றவர். யோக ஞானத்தால் "யோகியார்" என்ற பெயர்

பெற்றவர். இவர் சாத்தனார் இயற்றிய "கூத்த நூலுக்கு" விளக்கவுரை எழுதிப் புகழ் பெற்றவர்

யோகியாரின் திரைப்பட ஆர்வம் சமுதாயத் தொண்டின் அடிப்படையிலேயே இருந்தது. 'இரு சகோதரர்கள்' முதல் 'லட்சுமி' வரை ஏழு திரைப்படங்களுக்குக் கதை, உரையாடல், பாடல், இயக்கம் எனப் பலவகையிலும் தம் திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

வானொலிக்குப் பெருமளவில் நாடகங்களை எழுதியளித்துள்ளார். யோகியாரின் பத்திரிக்கைகளில் வெளிவந்த கவிதைகள் தவிர அச்சில் வராத பல கவிதைகளைப் பற்றியும் இந்நூலாசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

வலம்புரி சோமநாதன், பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி), மு.வரதராசன், ந. பிச்சமூர்த்தி, கண்ணதாசன் போன்றோர் யோகியாரைப் பற்றிப் பெருமை தரும் வகையில் குறிப்பிடுகின்றனர்

இந்நூலில் யோகியாரைப் பற்றிப் பல முதன்மைச் சான்றாதாரங்களைத் தருவதன் வாயிலாக, யோகியாரின் வாழ்க்கை வரலாற்றைச் செப்பமுறப் படைத்திருக்கிறார். இதன் ஆசிரியரும் எழுத்தாளருமான எஸ்.ஆர். அசோக்குமார் (சலன்). இவர் யோகியாரின் மகன் என்பது குறிப்பிடவேண்டிய செய்தி.

பல்வேறு தமிழாசிரியர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழ்ச் சமுதாயம் நன்கு அறிந்துகொள்ளும் வகையில், 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' என்னும் வரிசையில் வெளியிட்டுவரும் சாகித்திய அக்காதெமி பாராட்டுக்குரியது.

அன்பு அச்சகம், மதுரை – 1. ✆ 741116